# தாயும் தந்தையும்

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# தாயும் தந்தையும்

<u>பொருளடக்கம்</u>

**<u>பக்கம்</u>**


1. சமூகப் பணியாளர் செய்த உபதேசம்

1.1 உனக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் நியாயம் உண்டு 5
1.2 உன் பாவங்களை ஒப்புக்கொள் 9
1.3 கூடா நட்பினால் நீ கெட்டிருக்கிறாய் 14
1.4 நல்லாரும் தீயாரும் 23

2. இளைஞனின் வரலாறு

2.1 முன்பு இன்பமாய்த் தோன்றிய பாவம் இப்போது என்னை வருத்துகிறது 33
2.2 என் தந்தை 44
2.3 என் தாயார் 49
2.4 எங்களுடைய பக்தி 56
2.5 வளர்ப்பும் கூடா நட்பும் 75

3. அறம் செய்வோரை அறம் காக்கும் 86

# தாயும் தந்தையும்

## *1. சமூகப் பணியாளர் செய்த உபதேசம்*

### *1.1 உனக்கு விதிக்கப்பட்ட தண்டனையில் நியாயம் உண்டு.*

இது ஓர் இளைஞனின் கதை. கொலை செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கின்றான். இவனது முறையீட்டை மேல் நீதி மன்றம் நிராகரித்துவிட்டது. கூடிய விரைவில் இவன் தூக்கிலிடப்படுவான். இவன் மீது அனுதாபம் கொண்டு, அன்பான வார்த்தைகளைப் பேசி, இவனுக்கு நல்லுபதேசம் செய்த ஒரு சமூகப் பணியாளரிடம், தன் வாழ்வு கெட்டழிந்ததற்கான காரணங்களை இவன் விளக்கியுள்ளான்.

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கும் இவனை, முதன் முறையாகச் சமூகப் பணியாளர் காண வந்த போது, அவரது வருகையையும் அவரது உபதேசத்தையும் இவன் விரும்பி வரவேற்கவில்லை. அவருடன் தொடர்பு

கொள்ள விரும்பாதவன் போல் மௌனம் சாதித்தான். அவரது உபதேசத்தை விரும்பாமல் அவரை வெறுத்து அலட்சியத்துடன் நோக்கினான். அவரின் அன்பும் அனுதாபமும் அவரின் பக்தி உபதேசமும் தனக்குத் தேவையில்லை எனக் கூறுவது போல் மௌனம் சாதித்தான்

தம் வருகையையும் தம் பக்தி உபதேசத்தையும் அவன் விரும்பவில்லை என்பதைச் சமூகப் பணியாளர் உணர்ந்தார். இவன் அறத்திலும் நேர்மையிலும் நியாயத்திலும் நம்பிக்கை இல்லாதவன்; இவன் பக்தியில் நாட்டம் இல்லாதவன்; இவன் பலாத்காரத்தாலும் வன்முறைகளாலும் தன் காரியங்களைச் சாதித்துப் பழகியவன்; இவன் நல்லாரையும் நல்லார் கூறும் அறிவுரைகளையும் ஒரு பொருட்டாகக் கருதாதவன்; இவனுடைய குற்றங்களைக் கண்டித்து அறிவுரை கூறுவோரைப் பகைவர்களாகக் கருதி வெறுப்பவன் என இவனை அவர் அறிந்து கொண்டார்.

சமூகப் பணியாளர் அவனை நன்றாகப் புரிந்து கொண்டதால், அவன் மீது இரக்கம் கொண்டு இறுதிக் காலத்திலாவது பக்தி உபதேசத்தை ஏற்று, உள்ளத்தில் பக்தி கொண்டு, தன் பாவங்களுக்காக உள்ளம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கோரினானென்றால், அதனால் அவனுக்கு நன்மை உண்டாகும்; மரண பீதியும் ஓரளவு குறையும் எனக் கருதிய இவர், பல முறை அவனைக் காணச் சிறைச் சாலைக்குச் சென்றார்.

மிகவும் பொறுமையோடு, எளிய முறையில், அவனுக்கு விளங்கும் பொருட்டு, பல உவமைகளின் மூலம் பக்தியையும்

பக்தியின் பலனையும் மீண்டும் மீண்டும் அவனுக்கு உபதேசம் செய்தார்.

“உனக்கு வந்த இந்தத் துன்பம், உனக்குத் தண்டனை வழங்கிய நீதிபதியால் அல்ல; உன்னைக் கைது செய்த காவல் துறையினராலும் அல்ல; இங்குள்ள சிறைக் காவலர்களாலும் அல்ல; பெரிய வீடுகளில் ஆடம்பர வாழ்வு வாழும் பணக்காரர்களாலும் அல்ல; கல்வி கற்றுத் தொழில் புரியும் ஆசிரியர்கள், வைத்தியர்கள், வக்கீல்கள், வியாபாரிகள் போன்றவர்களாலும் அல்ல; நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டு, சட்ட விதிகளை மீறாமல், அடக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் வாழும் மக்களாலும் அல்ல. பிறகு ஏன் அவர்களை எல்லாம் பகைவர்களாகக் கருதி வெறுக்கின்றாய்? உனக்கு வந்த இந்தத் துன்பம் நீ குற்றச் செயல்களைச் செய்ததால்தான் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும்," என உபதேசம் செய்து, அவனுக்கு வந்துள்ள துன்பம் பிறரால் ஏற்படுத்தப்பட்டது அல்ல என்பதை அவனுக்கு உணர்த்தினார்.

“உன்னையே நீ ஆராய்ந்து பார். உன் கடந்த கால வாழ்வைக் கொஞ்சம் எண்ணிப் பார். நீ இந்த நிலைமைக்கு வந்ததன் காரணம் உனக்கு விளங்கும்.

நீ கூடிப் பழகிய நண்பர்களைக் கொஞ்சம் எண்ணிப் பார். அவர்களுடைய குணங்களையும் கொள்கைகளையும் எண்ணிப் பார். அவர்களோடு கூடி நீ வாழ்ந்த வாழ்வை எண்ணிப் பார். இவற்றைச் செய்தாய் என்றால், உன் வாழ்வு கெட்டழிந்ததன் காரணத்தை நீ உணர்வாய்," என அவனுக்கு

உபதேசம் செய்து, அவனுக்கு வந்த துன்பம் அவன் தீய வழியில் சென்று, தீய செயல்களைச் செய்ததால்தான் என்பதை அவனுக்கு உணர்த்தினார்.

“உன்னைக் குறை கூறுவதற்காகவோ, குற்றம் சாட்டுவதற்காகவோ, உன் மீது பழி சுமத்துவதற்காகவோ நான் இங்கு வரவில்லை. உனக்கு நல்லனவற்றை உபதேசம் செய்து ஆறுதல் கூறுவதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்."

நான் கூறியதுபோல், நீ உன் கடந்த கால வாழ்வை எண்ணிப் பார்த்து, உன் குற்றங்களை உணர்ந்து கொண்டால்தான் நான் கூறும் நல்லுபதேசம் உனக்குப் பலன் தரும். நீ அவ்வாறு செய்யாவிட்டால், உன் நன்மையைக் கருதி நான் உனக்கு நல்லுபதேசம் செய்த போதிலும், நீ என் உபதேசத்தை வெறுத்து அலட்சியப் படுத்துவாய். வெறுப்பும் பகையும் சினமும் உன் மனத்தை விட்டு விலகாது. இதனால் உனக்கு இழப்பே தவிர நன்மை இல்லை.

கடந்த காலத்தில் நீ பிறருக்குச் செய்துள்ள துன்பங்களையும் அவர்கள் சிந்திய கண்ணீரையும் எண்ணிப் பார். பிறரை மிரட்டி, பயமுறுத்தி உன் காரியங்களைச் சாதித்ததையும்; பலாத்காரத்தாலும் வன் செயல்களாலும் நீ செய்த அக்கிரமங்களையும்; எளியோரையும் அப்பாவிகளையும் குற்றமற்ற நிரபராதிகளையும் நீ வருத்தித் தண்டித்துத் துன்புறுத்தியதையும்; உன் அடாத செயல்களால் பிறர் கண்ணீர் சிந்தியதையும் இப்போது நீ எண்ணிப் பார்க்க வேண்டும்.

எப்போது நீ இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கின்றாயோ அப்போதுதான் உன் குற்றங்களை நீ உணர்வாய்; உனக்கு வழங்கப்பட்ட தண்டனை நியாயமானதே என நீ அறிவாய். உனக்கு வழங்கப்பட்ட தண்டனையில் நீதியும் நியாயமும் உண்டு என நீ உணர்வாய்.

“நமக்கு வழங்கப்பட்ட தண்டனை நியாயமானதே” என எப்போது நீ உணர்கிறாயோ அப்போது வெறுப்பும் சினமும் பகைமையும் உன் மனத்தை விட்டு விலகும்; தண்டனையை ஏற்றுக் கொள்ளும் மனவலிமையைப் பெறுவாய். இது உனக்கு ஒரு வெற்றியாகும்."

இப்படியெல்லாம் சமூகப் பணியாளர் மீண்டும் மீண்டும் அவனுக்கு உபதேசம் செய்து, அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனையில் நியாயம் உண்டு, அதில் அநியாயம் இல்லை என்பதை அவனுக்குப் புரிய வைத்தார்.

## *1.2 உன் பாவங்களை ஒப்புக்கொள்.*

ஆரம்பத்தில் சமூகப் பணியாளரின் உபதேசத்தை

அவன் விரும்பவில்லை; வரவேற்கவில்லை. அதில் அக்கறை காட்டவில்லை. இருப்பினும் அவர் மீண்டும் மீண்டும் செய்த உபதேசம் பலன் தராமல் போகவில்லை. சிறுகச் சிறுக அவனிடம் மாறுதல்கள் தென்பட்டன. உபதேசத்தில் அக்கறை காட்ட ஆரம்பித்தான். பிறகு கவனமாகக் கேட்டான். அவரும் வாரத்திற்கொருமுறை சிறைச்சாலைக்குச் சென்று உபதேசம் செய்தார்.

அவனிடம் தோன்றிய மாறுதல்களைக் கவனித்த சமூகப் பணியாளர், "இவன் நாம் கூறியதுபோல் தன் கடந்த கால வாழ்வை எண்ணிப் பார்த்துத் தன் குற்றங்களை உணர்ந்து கொண்டான். இனிமேல் நன்மை தரும் நல்லுபதேசங்களைக் கேட்பான்," என எண்ணியவராய் அவனுக்குத் தொடர்ந்து உபதேசம் செய்து வந்தார்.

"உனக்கு வழங்கப்பட்ட தண்டனை நியாயமானதே என நீ ஏற்றுக் கொண்டதால், அடுத்து நீ என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்குகிறேன். கவனமாகக் கேள்.

தண்டனைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று இவ்வுலகத் தண்டனை; மற்றொன்று அடுத்த உலகத் தண்டனை.

இவ்வுலகத் தண்டனை என்பது, இந்த வாழ்வில் செய்த குற்றங்களுக்கு இந்த வாழ்விலேயே தண்டிக்கப்படுவதாகும். உதாரணத்திற்கு, குற்றச் செயல்களைச் செய்த ஒரு மனிதரை எடுத்துக் கொள்வோம். இவர் குற்றச் செயல்களைச்

செய்ததால், காவல் துறையினர் இவரைக் கைது செய்து, நீதி மன்றத்தில் விசாரித்து குற்றச் செயலுக்கு ஏற்ற தண்டனையை வழங்குவார்கள். இது, இந்த வாழ்வில் செய்த குற்றங்களுக்கு இந்த வாழ்விலேயே தண்டனையை அனுபவிப்பதாகும். இது இவ்வுலகத் தண்டனை.

உன் நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம். நீ குற்றச் செயல்களைச் செய்ததால், அதிகாரிகள் உன்னைக் கைது செய்து, நீதி மன்றத்தில் நிறுத்தி, விசாரித்துத் தண்டனை வழங்கி உள்ளார்கள். இது, இந்த வாழ்வில் நீ செய்த குற்றங்களுக்கு இந்த வாழ்விலேயே தண்டனை அனுபவிப்பதாகும். இது இவ்வுலகத் தண்டனை.

அடுத்த உலகத் தண்டனை என்பது, தற்போதைய வாழ்வு முடிவுற்று உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால் அனுபவிக்கும் தண்டனை. பாவ கருமங்களைச் செய்தோர், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால் நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ மீண்டும் பிறந்து துன்பப்படுவார்கள். இது அடுத்த உலகத் தண்டனை. நரகப்பிறப்பு, பேய்ப்பிறப்பு, மிருகப்பிறப்பு இவைகள் அடுத்த உலகத் தண்டனைகள்.

பாவ கருமங்களைச் செய்வோருக்கு இந்த உலகிலும் தண்டனை உண்டு, அடுத்த உலகிலும் தண்டனை உண்டு; இந்த உலகிலும் தண்டிக்கப் படுவார்கள், அடுத்த உலகிலும் தண்டிக்கப்படுவார்கள்; இந்த உலகிலும் துன்பப்படுவார்கள், அடுத்த உலகிலும் துன்பப்படுவார்கள்.

பாவ கருமங்களைச் செய்த எல்லாருமே இவ்வுலகத்தில் தண்டிக்கப்படுவதில்லை. சிலர் இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். ஆனால், அடுத்த உலகத் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது. அடுத்த உலகில் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால் நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ மீண்டும் பிறந்து, துன்பத்தை அனுபவிப்பார்கள்.

பாவம் உடனே பழுப்பதில்லை; அது பழுக்கக் காலம் எடுக்கும். அதாவது, பாவம் உடனே துன்பத்தைத் தருவதில்லை; அது துன்பப் பலனைக் கொடுக்கக் காலம் எடுக்கும். பாவம் துன்பப் பலனைத் தராதவரை இன்பமாய்த்தான் இருக்கும். அது துன்பப் பலனைத் தரும்போது ஆராத் துயரம் பற்றிக் கொள்ளும். பாவச் செயல்களைச் செய்வோர் இதை அறிவதில்லை.

உன் கடந்த கால வாழ்வைப் பின்னோக்கிப் பார்ப்போம். ஒரு காலத்தில் பாவச் செயல்களில் கிடைத்த பொருளிலும் இன்பத்திலும் நீ பூரித்து மகிழ்ந்தாய். அப்போது பாவம் உனக்குத் தேன்போல் இனித்தது; இன்பமாய்த் தோன்றியது. ஏன்? அப்போது உன் பாவம் இன்னும் பழுக்கவில்லை. அது துன்பப் பலனைத் தர ஆரம்பிக்கவில்லை.

இதை அறியாத நீ, பாவத்தில் கிடைத்த பொருளிலும்

இன்பத்திலும் மயங்கி, அறிவிழந்து, மீண்டும் மீண்டும் பாவச் செயல்களைச் செய்தாய். மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்படுவாய் என அப்போது நீ எண்ணியது உண்டா? உன் பாவம் இப்படிப்பட்ட துன்பத்தைத் தரும் என்று அப்போது உன் எண்ணங்களுக்கு எட்டியது உண்டா?

இப்போது உன் பாவம் பழுத்துவிட்டது; அது துன்பப் பலனைத் தரத் தொடங்கிவிட்டது. அச்சமும் வேதனையும் துயரமும் உன்னை இரவிலும் பகலிலும் வருத்துகின்றன. நீயோ இவற்றிலிருந்து தப்பிக்க ஏதேனும் வழி உண்டா எனத் தேடி, உன் குடும்பத்தாரிடமும் பழைய நண்பர்களிடமும் வக்கீல்களிடமும் உதவி கேட்கிறாய்.

இவர்களில் எவருமே உனக்கு உதவ முடியாது. ஏன்? பாவம் பழுத்துத் துன்பப் பலனைத் தரத் தொடங்கிவிட்ட போது, அதன் பிடியிலிருந்து தப்பமுடியாது. நீ வானில் எழுந்து பறந்தாலும் அதன் பிடியிலிருந்து தப்பமுடியாது.

அப்படியே இவர்களின் உதவியால் உனக்கு விதிக்கப்பட்ட தண்டனையிலிருந்து நீ தப்பித்துக் கொண்டாலும் அடுத்த உலகில் உனக்குத் தண்டனை உண்டு என்பதை மறந்து விடாதே! அடுத்த உலகக் தண்டனையிலிருந்து இவர்களால் உன்னை மீட்க முடியுமா?

உனக்கு உதவி மிகவும் அவசியமான இந்த நேரத்தில், எவரால் உதவ முடியும்? இறைவன் ஒருவரால்தான் உனக்கு உதவ முடியும். ஆகவே, தாமதிக்காமல் இறைவனின் உதவியை நீ நாட வேண்டும்.

உனக்கு வழங்கப்பட்ட தண்டனை நியாயமானதே என ஏற்று, அடுத்த உலகிலும் உனக்குத் தண்டனை காத்திருக்கிறது என்பதையும் உணர்ந்து, நீ செய்த பாவங்களுக்காக உள்ளம் வருந்தி, இறைவனிடம் அழுது மன்னிப்புக் கேள். இறைவன் மிகவும் கருணை உள்ளவர்.

உன் பாவங்களை ஒப்புக் கொள். இறைவனிடம் மன்னிப்புக் கேள். இதைச் செய்தாய் என்றால், மரண பயம் குறையும்; தண்டனையை ஏற்றுக் கொள்ளும் மன வலிமையைப் பெறுவாய். மனம் ஆறுதலடையும். அடுத்த உலகில் இறைவனின் உதவி உனக்குக் கிடைக்கும். இறைவன் மிகவும் கருணை உள்ளவர்.

## *1.3கூடா நட்பினால் நீ கெட்டிருக்கிறாய்*

சமூகப் பணியாளர் வாரம் ஒரு முறை சிறைச்சாலைக்குச் சென்று அவனுக்கு நல்லுபதேசம் செய்தார். அவனும் தற்போது அவரது உபதேசங்களைக் கருத்துடன் கவனமாகக் கேட்டான். பஞ்ச தந்திரத்திலிருந்து ஒரு கதையை எடுத்துக் கூறி, அவன் வாழ்வு அழிந்ததன் காரணத்தை அவனுக்கு விளக்கினார்.

ஒரு காட்டில் கிளி ஒன்று மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து வந்தது; அந்தக் கூட்டில் முட்டையிட்டு அடை காத்து இரு குஞ்சுகளைப் பொரித்தது. குஞ்சுகள் இரண்டும் வளர்ந்து பறக்கும் தருவாயில், ஒரு வேடனின் வலையில் சிக்கிக் கொண்டன. வலையில் அகப்பட்ட கிளிகளை வேடன் பிடிக்க வந்தபோது, ஒன்று அவன் பிடியிலிருந்து தப்பிப் பறந்து சென்றது. மற்றொன்றை வேடன் பிடித்துத் தன் வீட்டிற்குக் கொண்டுசென்று, ஒரு கூட்டில் அடைத்து வளர்த்து வந்தான்.

தப்பியோடிய கிளிக்குஞ்சு, அக்காட்டில் வாழ்ந்த ஒரு துறவியின் ஆசிரமத்தைச் சென்றடைந்தது. துறவி கிளியிடம் அன்பு கொண்டு, அன்புடன் பேசி, இனிய சொற்களைக் கூறி, பிரியமாக வளர்த்து வந்தார். வேடன் கொண்டு சென்ற கிளி, வேடனின் வீட்டில் வளர்ந்தது. அது அவனது கொடிய செயல்களைப் பார்த்தும் அவனது கொடுஞ்சொற்களைக் கேட்டும் வளர்ந்து வந்தது.

ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாட வந்த அந்நாட்டு மன்னர், தம் பரிவாரங்களிடமிருந்து பிரிந்து வழி தெரியாமல் காட்டில் அலைந்தார். அச்சமயம் வேடன் ஒருவனின் குடிசையைப் பார்த்த மன்னர், வழி கேட்கலாம் என எண்ணிக் குடிசையை நோக்கி வந்தார்.

கூட்டில் இருந்த கிளி, மன்னன் குதிரையில் வருவதைப் பார்த்ததும் “எஜமான், எஜமான்! இங்கு ஒருவன் வருகிறான். அவனைப் பிடியுங்கள், கயிற்றால் கட்டுங்கள்.

கொல்லுங்கள், கொல்லுங்கள்!" என்று கத்தியது.

இதைக் கேட்ட மன்னர், வேகமாகக் குதிரையைத் திருப்பி, வேறு திசையில் சென்றார். வேடனின் குடிசையிலிருந்து வெகுதூரத்தில், காட்டின் மற்றொரு பகுதியில் இருந்த துறவியின் ஆசிரமத்தை மன்னர் கண்டார். ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்.

அந்த ஆசிரமத்தில் இருந்த கிளி, மன்னர் குதிரையில் வருவதைப் பார்த்ததும், “வாருங்கள், வாருங்கள்! அமருங்கள்; நீர் அருந்துங்கள்; எங்கள் ஆசிரமத்தில் உள்ள இனிய பழங்களைச் சாப்பிட்டுக் களைப்பாருங்கள்!” என்றது.

இதைக் கேட்ட மன்னர் ஆச்சரியமடைந்தார். கிளியிடம் கேட்டார்: “காட்டின் மற்றொரு பகுதியில் உன்னைப் போன்றதொரு கிளி என்னைப் பார்த்ததும் , இவனைப் பிடியுங்கள், பிடியுங்கள்! கயிற்றினால் கட்டுங்கள், கட்டுங்கள்! கொல்லுங்கள், கொல்லுங்கள்! எனக் கூச்சலிட்டது. ஆனால் நீயோ, என்னை அன்புடன் வரவேற்று, உபசரிக்கிறாய். ஏன் இந்த மாறுபாடு?" என மன்னர் கேட்டார்.

கிளி மன்னரிடம் கூறியது:

“நாங்கள் இருவரும் சகோதரர்கள், ஒரு தாயின் குழந்தைகள், பறக்கும் தருவாயில் ஒரு வேடனின் வலையில் அகப்பட்டுக் கொண்டோம். வலையில் இருந்து தப்பிய நான் இந்த ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தேன்.

இங்குள்ள துறவி என்னை அன்புடன் வளர்த்து வந்தார். அவர் எனக்கு இனிய சொற்களையும் நல்ல பண்புகளையும் கற்றுத் தந்தார். துறவியிடம் வளர்ந்த நான் அவரைப்போல் நற்குணங்களையும் நற்பண்புகளையும் பெற்றுள்ளேன்.

என் சகோதரனை வேடன் பிடித்துச் சென்று தன் குடிசையில் வளர்த்து வந்தான். மிருகங்களைக் கொன்று மாமிசத்தைச் சாப்பிடும் வேடன், என் சகோதரருக்குக் கடுஞ்சொற்களையும் தீய பண்புகளையும் கற்றுக் கொடுத்தான். வேடனிடம் வளர்ந்த என் சகோதரன், வேடனைப் போல் தீய குணங்களையும் தீய பண்புகளையும் பெற்றுள்ளான்," என்றது.

ஆகவே, இந்தக் கிளிகளைப் போல், ஒருவனுடைய அறிவு அவன் சேரும் மக்களின் இயல்பைப் பொருத்தே அமையும். நல்லொழுக்கங்களும் நற்குணங்களும் உள்ள நல்லாரோடு உறவாடினோமென்றால், நாமும் நல்லொழுக்கங்களையும் நற்பண்புகளையும் பெறலாம். தீயொழுக்கங்களும் தீய குணங்களும் உடைய தீயாரோடு உறவாடினோமென்றால், நாமும் தீயொழுக்கங்களையும் தீய குணங்களையும் பெறுவோம்.

வேடனிடம் வளர்ந்த கிளி, அவனிடமிருந்து தீய குணங்களையும் கொடிய வார்த்தைகளையும் கற்றுக்கொண்டது. அது போல், பழக்க தோசத்தால் நீ கெட்டிருக்கிறாய். கூடா நட்பினால் நீ கெட்டிருக்கிறாய்.

அக்கிரமம் செய்வோரோடு கூடிப் பழகியதால், நீயும்

அக்கிரமம் செய்யத் துணிந்தாய். அடாத செயல்களைச் செய்வோரோடு கூடிப் பழகியதால், நீயும் அடாத செயல்களைச் செய்யத் துணிந்தாய். பாவச் செயல்களைச் செய்வோரோடு கூடிப் பழகியதால், நீயும் பாவச் செயல்களைச் செய்யத் துணிந்தாய்.

எளியாரையும் அப்பாவிகளையும் தண்டித்துத் துன்புறுத்துவோரோடு நீ கூடிப் பழகியதால், நீயும் எளியாரையும் அப்பாவிகளையும் தண்டித்துத் துன்புறுத்தக் கற்றுக் கொண்டாய். பிறரை மிரட்டிப் பயமுறுத்திப் பலாத்காரத்தால் தம் காரியங்களைச் சாதித்துக் கொள்வோருடன் நீ கூடிப் பழகியதால், நீயும் பிறரை மிரட்டிப் பயமுறுத்திப் பலாத்காரத்தால் உன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டாய்.

ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, தங்களின் அடாத செயல் நியாயமானதே எனச் சாதிப்போரோடு நீ கூடிப் பழகியதால், யார் என்ன நியாயம் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளாமல், ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி, உன் அடாத செயல் நியாயமானதே எனச் சாதிக்கக் கற்றுக் கொண்டாய்.

இத்தகைய மக்கள்தாம் உன்னுடைய நண்பர்கள்; தோழர்கள்; கூட்டாளிகள். இவர்களைத்தான் நீ கெட்டிக்காரர்கள் என்றும் திறமைசாலிகள் என்றும் சாமர்த்தியக்காரர்கள் என்றும் தைரியசாலிகள் என்றும் கருதி, அவர்களிடம் நட்பும் விசுவாசமும் கொண்டு அவர்களைப் பின் பற்றினாய்.

இவர்கள்தாம் உனக்குக் குரு. உனக்கு அறிவுரை கூறி, ஆலோசனை கூறியவர்களும் இவர்களே! அகங்காரமும் அடங்காமையும் வலிமை என உனக்கு அறிவுரை கூறி, உன்னை மூர்க்கனாக உருவாக்கியவர்களும் இவர்கள்தாம்.

நீர் அது ஓடும் நிலத்தின் நிறத்தையும் சுவையையும் பெறுகிறது. செம்மண்ணில் ஓடும் நீர் சிவந்த நிறமாகவும் கருமண்ணில் ஓடும் நீர் கருமை நிறமாகவும் மாறிவிடுகிறது. உப்பு மண்ணில் ஓடும் நீர் உப்பு நீராக மாறிவிடுகிறது. அறிவும் அவ்வாறுதான். நல்லாரின் சேர்க்கையினால் நற்குணங்களையும் நல்ல பண்புகளையும் நற்செயல்களையும் ஒருவன் பெறுகின்றான். தீயாரின் சேர்க்கையினால் தீய குணங்களையும் தீய பண்புகளையும் தீய செயல்களையும் ஒருவன் பெறுகின்றான்.

தீமை பயக்கும் தீமையை மட்டுமா உன் கூட்டாளிகள் உனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்? மற்றொன்றையும் உனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். நன்மை பயக்கும் நல்லனவற்றை அலட்சியப்படுத்துவதற்கும் உதாசீனப்படுத்துவதற்கும் வெறுப்பதற்கும் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

அடக்கம், வணக்கம், மரியாதை, நேர்மை, நியாயம், மன்னிப்பு, பொறுத்தல், தயாள சிந்தனை இவை யாவும் பலவீனம் என்றும் கோழைத்தனம் என்றும் கற்றுக் கொடுத்து; நல்லாரையும் நல்லாரின் அறநெறி ஒழுக்கங்களையும் கேலி செய்து, பரிகசித்து, எள்ளி நகையாடக் கற்றுக்

கொடுத்திருக்கிறார்கள்.

நன்மை பயக்கும் நல்லனவற்றிலிருந்து உன்னை விலக்கி தீமை பயக்கும் தீயனவற்றோடு உன்னை ஐக்கியமாக்கி தவறான கொள்கைகளைக் கற்றுக் கொடுத்துக் கேடு விளைவிக்கும் வழியில் உன்னை அழைத்துச் சென்றுள்ளனர்.

இவர்கள்தாம் உன் நண்பர்கள்; தோழர்கள் ; கூட்டாளிகள். இவர்கள்தாம் உனக்குக் குரு; அறிவுரை கூறி, ஆலோசனை கூறியவர்கள். இவர்களைப் பின்பற்றியதால்தான் உன் வாழ்வு பாழாயிற்று. பழக்க தோசத்தால் உன் வாழ்வு நாசமாயிற்று.

நாம் வாழ்வது கிராமமாக இருந்தாலும் பட்டணமாய் இருந்தாலும் அங்கெல்லாம் நல்லாரும் இருப்பார்கள், தீயாரும் இருப்பார்கள். நல்லார் தீயார் மத்தியில் வாழும் நாம், கருத்தில்லாமல், சிந்தனையில்லாமல் வாழக்கூடாது. ஏன்? ஒருவருடைய அறிவு, அவர் சேரும் மக்களின் இயல்பைப் பொருத்தே அமைகிறது.

வாழ்க்கை இன்பங்களை நல்லொழுக்கங்களின் வழியும் நாடலாம்; தீயொழுக்கங்களின் வழியும் நாடலாம். தீயொழுக்கம் உடனே இன்பத்தைத் தரும். அது பழுத்துத் துன்பப் பலனைத் தர காலமெடுக்கும். தீயொழுக்கம் துன்பப் பலனைத் தராதவரை, இன்பமாய்த்தான் இருக்கும். ஆனால் அது பழுத்துத் துன்பப் பலனைத் தரும்போது, ஆறாத் துயரம்

பற்றிக் கொள்ளும்.

தீயார் இனிய சொற்களைப் பேசி மயக்குவார்கள். ஆசை மொழிகளைப் பேசிக் கவர்வார்கள்." இன்பங்களை இன்புற்று அனுபவி" எனத் தூண்டுவார்கள். தவறான ஆலோசனை கூறி, தவறான கொள்கைகளைக் கற்றுக் கொடுத்து தீய வழியில் அழைத்துச் செல்வார்கள்.

தீயாரின் நட்பினர்ல் கிடைக்கும் பொருளிலும் இன்பத்திலும் மயங்கி, அவர்களோடு நட்பு கொள்ளக் கூடாது. தீயாரின் நட்பு துன்பம் தரும். தீயார் நரகத்திற்குக் கூட்டிச் செல்வார்கள்.

இதை அறிந்து, தீயாரிடமிருந்து விலகி, நல்லாரோடு நட்பு கொள்ள வேண்டும். நல்லார் நம் குற்றங்களைக் கண்டித்து அறிவுரை கூறுவார்கள். அது நமக்கு வேதனையாக இருந்த போதிலும், நல்லாரை விட்டுப் பிரியாமல் அவர்களைப் பின் தொடர வேண்டும். அதனால் நமக்கு நன்மை உண்டாகும். நல்லார் தெய்வலோகத்திற்குக் கூட்டிச் செல்வார்கள்.

இப்போது நீ நரகத்தின் வாயிலில் நிற்கின்றாய். உன் பாவச் செயல்கள் துன்பப் பலனைத் தர ஆரம்பித்துவிட்டன. அதன் பலனை இப்போது அனுபவிக்கின்றாய். அச்சமும் வேதனையும் உன்னை அல்லும் பகலும் வருத்தித் துன்புறுத்துகின்றன. அடுத்த உலகிலும் நீ செய்த பாவ கருமங்களின் துன்பப் பலனை நீண்ட காலம் நரகத்தில் அனுபவிக்க வேண்டும். இதுதான் உண்மை. இதை ஏற்றுக் கொள்.

உன்னை நரகத்தின் தீய்க்குள் தள்ளினோரை ஏன் இன்னும் நண்பர்கள் எனக் கருதி, அவர்கள் உதவிக்கு வரமாட்டார்களா என எண்ணி எண்ணிப் பரிதவிக்கின்றாய்? அவர்களுக்கு நரகத்திற்குக் கூட்டிச் செல்லத்தான் தெரியும்; நரகத்திலிருந்து மீட்கத் தெரியாது. அவர்களால் மீட்கவும் முடியாது.

அவர்களை மறந்துவிடு. "கூடா நட்பினால் கெட்டோம்" என எண்ணி அவர்களை மறந்துவிடு.

உன்னைப் பற்றிய துன்பம் ஒரு நாள் அவர்களையும் பற்றிக் கொள்ளும். அன்று அவர்களுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்? “பாவம் செய்தோமே!” என உன்னோடு சேர்ந்து அவர்களும் நரகத்தில் அல்லல் படுவார்கள்.

எந்நேரத்திலும் சிறை அதிகாரிகள் உன் தண்டனையை நிறைவேற்றிவிடுவார்கள். ஏன் இன்னும் தாமதம். இந்த இக்கட்டான நேரத்தில் உனக்கு உடனே உதவி தேவை. எங்கு உதவி கிடைக்குமோ அங்கு உதவியை நாடு. எவரால் உதவ முடியுமோ அவரிடம் உதவி கேள்.

இனிமேல் இறைவன் ஒருவரால் மட்டுமே உனக்கு உதவ முடியும். உன் பாவங்களை எல்லாம் இறைவன் அறிவார். அவரிடமிருந்து உன் பாவங்களை நீ மறைக்க முடியாது. மறைப்பதனால் என்ன பலன்?

இறைவனிடம் உன் பாவங்களை ஒப்புக் கொள். அழுது

அவரிடம் மன்னிப்புக் கேள். இறைவன் மிகவும் கருணை உள்ளவர்.

❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁❁

## 1.4 நல்லாரும் தீயாரும்.

சமூகப் பணியாளர் தொடர்ந்து வாரத்திற்கு ஒரு முறை சிறைச்சாலைக்குச் சென்று அவனுக்கு உபதேசம் செய்து வந்தார். இப்போது அவன் இவரின் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்தான். அவர் வந்ததும் அவரை வரவேற்று, வணக்கம் தெரிவித்து மரியாதை செலுத்தினான். அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டான். இடையிடையே கேள்விகள் கேட்டுத் தெளிவு பெற முயன்றான்.

"இப்போது இவனுக்குப் பக்தியையும் பக்தியின் பயனையும் விளக்கினால், அதை ஏற்பான்" என எண்ணிய சமூக சேவையாளர், பக்தியையும் பக்தியின் பலனையும் அவனுக்கு விளக்கினார்.

"அன்பான சொற்களைப் பேசிய கிளியும், கொடிய சொற்களைப் பேசிய கிளியும், இரண்டும் ஒரு தாய்க் குழந்தைகளே! ஆனால் பழக்க தோசத்தினால் ஒன்று பண்புள்ளதாகவும் மற்றது பண்பற்றதாகவும் மாறிவிட்டன.

நல்லாரும் தீயாரும் எல்லாரும் இறைவனின்

குழந்தைகளே! எல்லாரும் இறைவனின் குழந்தைகள்தாம் என்ற போதிலும் சிலர் நல்லவர்களாகவும் சிலர் தீயாராகவும் மாறுகிறார்கள். ஏன்?

சிலர் இறைவனை மறந்துவிடுகிறார்கள். இறைவனை மறந்துவிட்டதால் தீயாராக மாறிவிடுகிறார்கள். ஆகவே, தீயார் என்பார் இறைவனை மறந்து விட்டவர்கள்.

சிலர் இறைவனை மறப்பதில்லை. இறைவனை மறவாததால் நல்லவர்களாக ஆகிறார்கள். ஆகவே, நல்லார் என்பார் இறைவனை மறவாதவர்கள்.

இறைவனை மறந்தவர்கள் தீயாராகவும் இறைவனை மறவாதார் நல்லாராகவும் ஆகிறார்கள். அது எப்படி? கவனமாகக் கேள்! நான் விளக்குகிறேன்.

மானிட வாழ்வு இறைவனின் நியதிக்குக் கட்டுப்பட்டது. இறைவனின் நியதியை எவரும் மீற முடியாது. இறைவனின் நியதியை அறநீதி என்றும் வினைப் பயன் என்றும் சான்றோர் கூறுவதுண்டு.

இறைவனின் நியதியில் ஒன்று தண்டனை; மற்றொன்று அருள்.

அறநெறிகளை அலட்சியப் படுத்தி, பாவச் செயல்களைச் செய்வோர் இங்கும் தண்டிக்கப் படுவார்கள்; உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மரணத்திற்கு அப்பால் அடுத்த உலகிலும் தண்டிக்கப் படுவார்கள். இது இறைவனின்

தண்டனை.

அறநெறிகளில் ஒழுகி, குற்றமில்லாக் கருமங்களைச் செய்வோர் இங்கும் சுகம் பெறுவார்கள்; உடலை விட்டு உயிர் பிரிந்த பின் அடுத்த உலகிலும் சுகம் பெறுவார்கள். இது இறைவனின் அருள்.

இதுதான் இறைவனின் நியதி. இறைவனின் நியதி ஒருபோதும் தவறுவதில்லை என்பதால், பாவச் செயல்களைச் செய்தோர் துன்புற்று வருந்துகிறார்கள்; நற்கருமங்களைச் செய்தோர் இன்புற்று சுகம் பெறுகிறார்கள்.

ஆகவே, பாவ கருமங்களைச் செய்தோர் துன்புற்று வருந்துவதும்; நற்கருமங்களைச் செய்தோர் இன்புற்று சுகம் பெறுவதும் இறைவனின் நியதியால்தான் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். அல்லது அறநீதியால்தான் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும்.

"இறைவனை மறந்துவிட்டவர்கள்" என்பதன் பொருள் என்ன?

சிலருக்கு இறைவனின் நியதியில் நம்பிக்கை இருக்காது. பாவ கருமங்களைச் செய்தோர், அவர்களின் பாவம் பழுத்த போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாமல் துன்புற்று வருந்துவதை இவர்கள் பார்த்தும்; "முன்பு அவன் பாவத்தைச் செய்தான்; இப்போது அவன் பாவமே அவனை வருத்துகிறது" என்று பிறர் சொல்வதைக் கேட்டும்,

இத்தகையோர் இறைவனின் நியதியை ஏற்பதில்லை; நம்புவதில்லை. பாவம் செய்தால் "இறைவன் தண்டிப்பார்” என்பதில் இவர்களுக்கு பூரண நம்பிக்கை இருப்பதில்லை.

பாவம் உடனே துன்பத்தைத் தருவதில்லை என்பதால், இவர்களுக்குப் பாவம் இன்பமாய்த் தோன்றும். பாவச் செயல்களினால் கிடைக்கும் இன்பத்திலும் பொருளிலும் மயங்கி, மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களைச் செய்வார்கள். இவர்கள் பாவத்திற்கு அஞ்சுவதில்லை. இறைவனின் தண்டனைக்கு அஞ்சுவதில்லை.

"பாவம் செய்தோரை இறைவன் தண்டிப்பார்" என்பதை இவர்கள் மறந்து, மீண்டும் மீண்டும் பாவ கருமங்களைச் செய்வதால், இத்தகையோர் “இறைவனை மறந்துவிட்டவர்கள்." இவர்கள் இறைவனை மறந்துவிட்டதால், பாவத்திற்கும் தண்டனைக்கும் அஞ்சாமல், தீய செயல்களைச் செய்து தீயாராக ஆகிவிடுகிறார்கள்.

ஆகவே, தீயாரும் இறைவனின் குழந்தைகள்தாம் என்றாலும், இவர்கள் இறைவனை மறந்து விட்டதால், தீய கருமங்களைச் செய்து தீயாராக மாறுகிறார்கள். அதனால் இங்கும் துன்பப்படுகிறார்கள், அடுத்த உலகிலும் துன்பப்படுகிறார்கள்.

"இறைவனை மறவாதவர்கள்" என்பதன் பொருள் என்ன?

சிலருக்கு இறைவனின் நியதியில் நம்பிக்கை

இருக்கும். பாவ கருமங்களைச் செய்தோர், அவர்களின் பாவம் பழுத்த போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாமல் துன்புற்று வருந்துவதை இவர்கள் பார்த்த போது, “பாவம் செய்தால் நமக்கும் இக்கதிதான்" என எண்ணி, பாவம் செய்வதற்கு அஞ்சுவார்கள்; இறைவனின் தண்டனைக்கு அஞ்சுவார்கள்.

இவர்கள் இறைவனின் தண்டனைக்கு அஞ்சுவதால், பாவத்தில் கிடைக்கும் பொருளிலும், இன்பத்திலும் மயங்குவதில்லை. அறநெறிகளைக் கடைப்பிடித்து, குற்றமில்லாக் கருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ்வார்கள்.

“பாவம் செய்தால் இறைவன் தண்டிப்பார்” என இறைவனின் நியதியை நம்பி, பாவத்திற்கு அஞ்சி, அறநெறிகளைக் கடைப்பிடித்து, நல்வாழ்வு வாழ்வோர், "இறைவனை மறவாதவர்கள்." இறைவனை மறவாத இவர்கள், நல்வாழ்வு வாழ்ந்து, இறைவனின் அருளைப் பெற்று, இங்கும் சுகம் பெறுவார்கள்; உடலை விட்டு உயிர் பிரிந்தபின், தெய்வலோகத்தில் பிறந்து சுகம் பெறுவார்கள்.

ஆகவே, நல்லாரும் தீயாரும் எல்லாரும் இறைவனின் குழந்தைகள்தாம் என்ற போதிலும், சிலர் 'இறைவனை மறந்துவிட்டதால்," தீய வழியில் சென்று, தீய கருமங்களைச் செய்து தீயாராக ஆகிறார்கள்; சிலர் 'இறைவனை மறவாததால்' நல்வழியில் சென்று, நற்கருமங்களைச் செய்து நல்லவர்களாக ஆகிறார்கள்.

ஆலயம் சென்று இறைவனைத் துதி பாடித்

தியானிக்கும் ஒருவனும் ஒழுக்கக் கேட்டில் கிடைக்கும் இன்பத்திலும் பொருளிலும் மயங்கி குற்றச் செயல்களைச் செய்தானென்றால், இவனும் இறைவனை மறந்தவன்தான். ஏன்?

இவன் இறைவனைத் துதி பாடித் தியானித்த போதிலும், இவனுக்கு இறைவனின் நியதியில் நம்பிக்கை இல்லை. இறைவனின் நியதியில் நம்பிக்கை இல்லாத இவன், பாவத்திற்கு அஞ்சாமல், ஒழுக்கக் கேட்டில் சென்று தீய செயல்களைச் செய்வான். இவனுக்கும் இறைவனை மறந்துவிட்ட தீயாருக்கும் என்ன வித்தியாசம்? தீயாரைப் போல் இவனும் அடுத்த உலகில் தீய கதிக்குத்தான் போவான்.

மற்றும் ஒருவர் ஆலயம் சென்று இறைவனைத் துதி பாடித் தியானிக்காத போதிலும், பாவத்திற்கு அஞ்சி, அறநெறிகளைக் கடைப்பிடித்து, குற்றமில்லாக் கருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ்ந்தாரென்றால், இவரே இறைவனை மறவாதவர். ஏன்?

இவர் ஆலயம் சென்று இறைவனைத் துதிபாடித் தியானிக்காத போதிலும், இவருக்கு இறைவனின் நியதியில் நம்பிக்கை உண்டு. இறைவனின் நியதியில் நம்பிக்கை உள்ள இவர், பாவத்திற்கு அஞ்சி, இறைவனின் தண்டனைக்கு அஞ்சி, நல்வாழ்வு வாழ்வதால், இவர் இறைவனை மறவாதவர்.

ஆகவே, எவரொருவர் இறைவனின் நியதியை நம்பும் மனத்துடன் ஏற்று, பாவத்திற்கு அஞ்சி, இறைவனின்

தண்டனைக்கு அஞ்சி, நன்னெறிகளைக் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ்கிறாரோ, அவர் இறைவனிடம் நம்பிக்கை உள்ளவர். இத்தகைய நம்பிக்கையைத்தான் "பக்தி" எனப் பெரியோர் கூறுவர். எவரொருவரிடம் இத்தகைய பக்தி உண்டோ அவர் இறைவனின் அருளைப் பெற்று, இங்கும் சுகம் பெறுவார்; உடலை விட்டு உயிர் பிரிந்த பின் அடுத்த உலகிலும் சுகம் பெறுவார்.

இறைவனின் நியதி ஒருபோதும் தவறுவதில்லை என்பதால், பாவத்தில் மகிழ்ந்து இருண்ட செயல்களைச் செய்தோர், இவர்களின் இருண்ட செயல்கள் பழுக்கும்போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது. தப்பி ஓட வழி எங்கும் இல்லை. அவர்களின் பாவமே அவர்களை அழிக்கும். இதை அறியாத நீ, உன்னைப் பற்றிய துன்பத்திலிருந்து தப்பிக்க வழி ஏதும் உண்டா என எண்ணி எண்ணிப் பரிதவிக்கிறாய்.

ஆனால், பாவ கருமங்களைச் செய்தவனும், இறைவன் முன் தன் பாவங்களை ஒப்புக் கொண்டு, அழுது புலம்பி மன்னிப்புக் கோரினான் என்றால், இறைவனின் கருணையைப் பெறலாம். இறைவன் மிகவும் கருணை உள்ளவர்.

தன் பாவங்களை ஒப்புக் கொள்ளாமல், தன் பாவங்களுக்காக அழுது புலம்பி இறைவனிடம் மன்னிப்புக் கோராமல், தன்னைப் பற்றிய துன்பங்களிலிருந்து தப்பிக்க ஒருவன் என்னதான் முயற்சி செய்தாலும், பாவத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது. மீண்டும் மீண்டும் இவன்

நரகத்தின் தீய்க்குள் விழுவான்.

உன்னை எடுத்துக் கொள்வோம். நீ இறைவனை மறந்துவிட்டதால், இறைவனின் தண்டனைக்கு அஞ்சாமல் பாவம் செய்தாய்; பிறருக்குத் துன்பத்தைச் செய்தாய், உன்னைப் போன்ற மக்களை "இருண்ட செயல்களைச் செய்து இருளில் வாழ்வோர்" எனப் பெரியார் கூறுவர்.

"இருளில் வாழ்வோர்" என்பதன் பொருள் என்ன?

இத்தகையோர், சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களை (அறநெறிகளை) அறியாத மக்கள். தர்ம உபதேசங்களை அறியாத இவர்கள், அறியாமையில் உழன்று கிடப்பார்கள். தர்ம உபதேசங்களை அறியாமல் அறியாமையில் உழன்று கிடக்கும் இவர்கள், சத்திய உண்மைகளை அறிவதில்லை. அதாவது,

"பாவம் உண்டு; புண்ணியம் உண்டு; நல்வினை உண்டு; தீவினை உண்டு; நல்லொழுக்கம் உண்டு; தீயொழுக்கம் உண்டு; செயல்களுக்குப் பிற்பயன் உண்டு; அடுத்த உலகம் உண்டு; அடுத்த உலகில் உயிர்கள் தம் செயல்களின் பலனை அனுபவிக்க வேண்டும்," என்பதை அறிவதில்லை.

"பாவ கருமங்களைச் செய்வோர், இவ்வுலக வாழ்விலும் துன்பப் படுவார்கள்; மரணத்திற்கு அப்பால், அடுத்த உலகிலும் நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ பிறந்து துன்பப்படுவார்கள்," என்பதை அறிவதில்லை.

"குற்றங்களைத் தவிர்த்து, நல்லொழுக்கங்களை மேற்கொண்டு, நற்கருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ்வோர், இவ்வுலக வாழ்விலும் சுகம் பெறுவார்கள்; மரணத்திற்கு அப்பால் அடுத்த உலக வாழ்விலும் தெய்வலோகத்தில் பிறந்து சுகம் பெறுவார்கள்" என்பதை அறிவதில்லை.

இவற்றை எல்லாம் அறியாத இவர்களுக்கு, இறைவனின் நியதியிலும் இறைவனின் தண்டனையிலும் நம்பிக்கை எழுவதில்லை. தர்ம உபதேசங்களை அறியாமல், இறைவனின் நியதியிலும் தண்டனையிலும் நம்பிக்கை இல்லாமல் அறியாமையில் உழன்று கிடப்பதால், இத்தகையோர் “இருளில் வாழ்வோர்."

அப்படியே இத்தகையோர் பக்தியை நாடினாலும், தவறான போதனைகளை நம்பி, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, பயனற்ற சடங்குகளைச் செய்து, குழப்பத்தில் வாழ்வார்கள். நன்மை பயக்கக்கூடியவற்றைக் கெடுதி விளைவிக்கக்கூடியவை எனக் கொள்வார்கள்; கெடுதி விளைவிக்கக்கூடியவற்றை நன்மை பயக்கக்கூடியவை எனக் கொள்வார்கள்; பாவமில்லாத இடத்தில் பாவத்தைக் காண்பார்கள்; பாவமுள்ள இடத்தில் பாவமின்மையைக் காண்பார்கள். இப்படி எல்லாம் காணும் இவர்கள், தவறான வழியில் சென்று, தீய கதியை அடைவார்கள்.

நீ தர்ம உபதேசங்களை அறியாததால், இறைவனின் நியதியிலும், இறைவனின் தண்டனையிலும் உனக்கு

நம்பிக்கை இல்லை. அதன் காரணத்தால், இருண்ட செயல்களைச் செய்து இருளில் வாழ்ந்து வந்துள்ளாய். இப்போது உன்னுடைய இருண்ட செயல்கள் பழுத்துவிட்டதால், இறைவனின் நியதிக்கு ஏற்பத் துன்பம் உன்னைப் பற்றிக் கொண்டது. தப்பிக்க வழி உண்டா என நீ எண்ணி எண்ணிப் பரிதவிக்கின்றாய்.

இறைவனை மறந்து, இருண்ட செயல்களைச் செய்து இருளில் வாழ்ந்த ஒருவனும், இறைவனையும் இறைவனின் நியதியையும் ஏற்று; உள்ளத்தில் பக்தி கொண்டு, தன் பாவங்களுக்காக உள்ளம் வருந்தி மன்னிப்புக் கோரி, நல்வழியில் நடந்தான் என்றால், அவனும் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வரலாம். மனித குலத்திற்கு இறைவன் வழங்கும் கருணை இது.

ஆகவே, "நாம் செய்த பாவம்" என உன் தண்டனையை ஏற்றுக்கொள். இறைவனை நாடு; உள்ளத்தில் பக்தி கொள். இறைவனிடம் உன் பாவங்களை ஒப்புக் கொண்டு, அழுது மன்னிப்புக் கேள். மரண பயம் குறையும். தண்டனையை ஏற்றுக் கொள்ளும் மன வலிமையைப் பெறுவாய். அடுத்த உலகிலும் இறைவனின் கருணையைப் பெறுவாய்.

இந்த வாழ்வில் செய்த இருண்ட செயல்களின் பலனை அடுத்த உலகில் அனுபவித்த பின், மீண்டும் நீ மானிடப் பிறப்பிற்கு வரும்போது, உன் மனம் பக்தியை நாடும். சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களில் உனக்கு நம்பிக்கை எழும். இறைவனின் நியதியிலும் தண்டனையிலும்

உனக்கு நம்பிக்கை பிறக்கும். அதன் காரணமாக, பாவத்திற்கு அஞ்சி, தண்டனைக்கு அஞ்சி, அறநெறிகளைக் கடைப்பிடித்து, நல்வாழ்வு வாழ்ந்து, இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவாய்.

ஆனால், இறைவனையும் இறைவனின் நியதியையும் மறந்து, பாவ கருமங்களைச் செய்த ஒருவன், தன் பாவங்களை ஒப்புக் கொள்ளாமல், இறைவனிடம் மன்னிப்புக் கோராமல், ஏதாவது காரணங்களைக் காட்டித் தன் இருண்ட செயல்கள் நியாயமானதே எனச் சாதித்தான் என்றால், இவன் இருளிலிருந்து இருளுக்குள் போவான். மீண்டும் மீண்டும் நரகத்திற்குள் விழுவான்.

சமூகப் பணியாளர் இவ்வாறெல்லாம் மீண்டும் மீண்டும் உபதேசம் செய்து, பக்தியையும் பக்தியின் பலனையும் அவனுக்கு விளக்கினார்.

# *2. இளைஞனின் வரலாறு.*

## *2.1 முன்பு இன்பமாய்த் தோன்றிய பாவம் இப்போது என்னை வருத்துகிறது.*

சமூகப் பணியாளர் வாரம் ஒரு முறை எனப் பத்து வாரங்கள் சிறைச்சாலைக்குச் சென்று, அந்த இளைஞனுக்குத் தர்ம உபதேசம் செய்து வந்தார். அவனும் தன் கடந்த கால வாழ்வை எண்ணிப் பார்த்து, தன் குற்றங்களை உணர்ந்து கொண்டான். தனக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயமானதே என்பதையும் ஏற்றுக் கொண்டான். இதுவரை சமூகப் பணியாளரிடம் தன் கடந்த கால வாழ்வைப் பற்றி அவன் பேசவில்லை. அவரும் இதுவரை அவனுடைய கடந்த கால வாழ்வைப் பற்றி எதையும் கேட்கவில்லை. இப்போது அவனே கூறுகின்றான்:

முதலில் தாங்கள் என்னைக் காண வந்த போது தங்களை வெறுத்தேன்; தங்கள் போதனைகளையும் வெறுத்தேன். நல்லார், தீயார், பாவம், புண்ணியம், இறைவனின் நியதி போன்ற தங்களுடைய சொற்கள் எனக்கு வெறுப்பைத் தந்தன. அதன் காரணமாக மனத்தில் சினமும் பகைமையும் எழுந்து, தங்களை வெறுப்புடன் பார்த்தேன். இதுவோ சிறைச்சாலை. எங்கு ஓடுவது! வேறு வழியின்று, தங்களின் போதனையைக் கேட்பவன் போல் பாவனை செய்து வந்தேன்.

எனக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையில் தாங்கள் மகிழ்ந்து, அதற்கு ஒரு நியாயத்தைக் கூறுவதாகக் கருதி, தங்களுடைய போதனையை முதலில் அலட்சியப் படுத்தினேன். ஆனால், என்னையும் அறியாமல் என் மனம் தங்கள் போதனையில் உள்ள உண்மைகளை உணர்ந்து அதில் லயிக்கத் தொடங்கியது. மனத்தில் வேறூன்றியிருந்த வெறுப்பும் பகைமையும் சிறுகச் சிறுக விலக ஆரம்பித்தன.

தங்களுடைய தர்ம உபதேசத்தில் நம்பிக்கை எழ ஆரம்பித்தது. இப்போது தங்களின் தர்ம உபதேசத்தைப் பூரணமாக நம்புகின்றேன்.

தங்களையும் தங்களின் போதனைகளையும் நான் அலட்சியப்படுத்தி, சினம் கொண்டு சிடு சிடுவென வெறுப்பைக் காட்டிய போதிலும் மீண்டும் மீண்டும் தாங்கள் இங்கு வந்து, மிகவும் பொறுமையாக எனக்கு நல்லுபதேசம் செய்தீர்கள்.

நானோ கொடியவன். கொடிய செயல்களைச் செய்த பாவி. அப்படியிருந்தும் என் மீது இரக்கங்கொண்டு, நல்லுபதேசம் செய்து, என் அறிவுக் கண்களைத் திறந்த தங்களுக்கு நன்றி கூறுகிறேன். தங்களின் தர்ம உபதேசத்தைக் கிடைப்பதற்கரிய பாக்கியமாக இப்போது நான் கருதுகிறேன்.

நான் வாழ்ந்த உலகம் இருண்ட உலகம். அடக்கம், வணக்கம், மரியாதை, நீதி, நேர்மை, நியாயம், பிறர் பிழை பொறுத்தல், மன்னிப்பு ஆகியவற்றை அறியாத உலகம். உண்மைக்கும், அறத்திற்கும் அங்கு இடமில்லை. பகை பாராட்டி வஞ்சம் தீர்க்கும் உலகம். மிரட்டி, பயமுறுத்தி, பலாத்காரத்தாலும் வன் செயல்களாலும் தன் காரியத்தைச் சாதிக்கும் உலகம். பிறர் என்ன நியாயம் சொன்னாலும் அதை ஏற்காமல், ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி, தன் அடாத செயல் நியாயமானதே எனச் சாதிக்கும் உலகம்.

இறைவனின் நியதியை அறியாத உலகம். இறைவனை மறந்துவிட்ட உலகம். இதுதான் நான் வாழ்ந்த உலகம்.

இருட்டில் வாழ்ந்த நான், பாவங்களைச் செய்து பாவியானேன். முன்பு பாவங்களைச் செய்தேன். இப்போது அதன் பலனை அனுபவிக்கிறேன். முன்பு இருளில் வாழ்ந்த போது பாவம் இன்பமாய்த் தோன்றியது. தங்களுடைய உபதேசத்தைக் கேட்டதால், தீயவை தீயினும் கொடியவை என்பதை இப்போது உணர்கிறேன். தாங்கள் கூறியதுபோல், என் பாவங்கள் பழுத்துத் துன்பப் பலனைத் தர ஆரம்பித்துவிட்டன. அடுத்த உலகிலும், நரகத்தினுள் விழுந்து, அங்கு நீண்ட காலம் துன்புற நேரும் என்பதில் ஐயமில்லை.

என் நண்பர்களுக்கும் இதே கதிதான். இதை அறியாத அவர்கள், எனக்காகப் பரிதாபப் படுகிறார்கள். என் கதிதான் அவர்களுக்கும் என உணர்ந்து கொண்டதால், நான் அவர்களுக்காகப் பரிதாபப் படுகிறேன். "பாவம் செய்தோமே" என அவர்களும் என்னோடு நரகத்தில் துன்புற வேண்டும் என்பதில் ஐயமில்லை என்பதால், எப்படி அவர்கள் எனக்கு உதவ முடியும்? இப்போது நான் இதை உணருகிறேன்.

ஓர் இரவு நானும் என் நண்பனும் கொள்ளையிடுவதற்காக ஒரு வீட்டில் நுழைந்தோம். அப்போது அந்த வீட்டில் தாயும் மகளும்தான் இருந்தார்கள். நாங்கள் வீட்டினுள் நுழைந்துவிட்டதை அறியாமல் இருவரும் அறையில் உறங்கிக் கொண்டிருந்தனர்.

அறையின் கதவு உள்ளே தாளிடப்பட்டிருந்தது. நான் கதவைக் காலால் உதைத்தேன். சத்தம் கேட்டு விழித்தெழுந்த தாயும் மகளும் விளக்கை ஏற்றிக் கதவைத் திறந்தனர். கையில் கத்தியுடன் நின்ற எங்களைப் பார்த்தவுடன், இருவரும் அச்சத்தால் நடுங்கினார்கள்.

என் நண்பன் மகளின் கழுத்தில் கத்தியை வைத்து அழுத்தியபடியே, தாயிடம் பணத்தையும் நகைகளையும் கொடுக்கும்படி மிரட்டினான். அச்சத்தால் நடுங்கிய அவள், மகளுக்குத் தீங்கு எதையும் செய்து விடாதீர்கள் எனக் கெஞ்சிக் கொண்டே, அலமாரியைத் திறந்து, பணத்தையும் நகைகளையும் எடுத்து என்னிடம் கொடுத்தாள்.

என் நண்பன் அந்தப் பெண்ணின் மேல் மோகம் கொண்டான். அவளைப் படுக்கை அறைக்கு இழுத்துச் சென்றான். அந்தத் தாய் என் கால்களைப் பிடித்துக் கொண்டு, மகளைக் கெடுக்க வேண்டாம் என என்னிடம் கெஞ்சினாள். நானோ அவளை ஏளனமாகப் பார்த்தேன். என் உள்ளத்தில் இரக்கமோ, அனுதாபமோ எழவில்லை.

இறைவனை மறந்து, பாவத்திற்கு அஞ்சாமல், இதுபோன்ற கொடிய செயல்களைச் செய்து, இருளில் வாழ்ந்துள்ளதால், தங்களின் தர்ம உபதேசத்தை ஆரம்பத்தில் நான் வெறுத்தேன். நலம் தரும் நல்லுபதேசத்தை வெறுத்ததற்குக் காரணம் நான் வாழ்ந்த இழிவான வாழ்வுதான் என்பதை இப்போது உணருகிறேன்.

இருண்ட செயல்களைச் செய்து, இருளில் வாழ்ந்த நானும் சில நற்செயல்களைச் செய்துள்ளேன். அனாதைகளுக்கு நான் பல முறை உதவியிருக்கிறேன். வறுமையில் வாடிய ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பணமும் உணவும் கொடுத்திருக்கிறேன். ஆபத்து அவசர வேளைகளில் உதவி கோரி என்னிடம் வந்தோருக்கு என்னால் முடிந்த மட்டும் உதவி செய்திருக்கிறேன். பிறருக்கு உதவ வேண்டும் என நான் விரும்பிய போதிலும், இறைவனை மறந்துவிட்டதால், என்னுடைய மூர்க்க குணம் என்னை மீண்டும் மீண்டும் பாவத்திற்குள் தள்ளியது.

நான் செய்த நற்செயல்கள் சிறிதே ஆயினும், அவை பலன் தராமல் போகவில்லை. ஆரம்பத்தில் தர்ம உபதேசத்தை வெறுத்த என் மனத்தில் இப்போது நம்பிக்கை எழுந்ததற்குக் காரணம், நான் செய்த நற்செயல்கள் தாம் என நான் கருதுகிறேன்.

முன்பு நான் இருளில் வாழ்ந்தேன். மரத்திற்கு மரம் குரங்கு தாவுவது போல், ஒரு பாவத்திலிருந்து இன்னொரு பாவத்திற்குத் தாவினேன். பாவம் செய்கிறோமே என நான் வருந்தியதே இல்லை. அப்போது பாவம் இன்பமாய்த் தோன்றியது. எனக்கு நானே கேட்டைத் தேடிக் கொண்டேன். எனக்கு வந்த துன்பம் பிறரால் வந்ததல்ல. நான் செய்த பாவமே என்னை அழிக்கின்றது. இப்போது நான் இதை உணருகிறேன்.

"இறைவனை நாடு, உள்ளத்தில் பக்தி கொள்,"

இவ்வாறு சொல்வது எளிது; செய்வது கடினம். அதுவும் இருண்ட செயல்களைச் செய்து, இருளில் வாழ்ந்த என்னைப் போன்றோருக்குப் பக்தி எளிதில் வருவதில்லை.

பழைய கொள்கைகளும் மூர்க்க குணமும் மனத்தில் ஆழமாக வேரூன்றியிருப்பதால், அவநம்பிக்கையும் கொடிய எண்ணங்களும் மீண்டும் மீண்டும் மனத்தில் எழுந்து பக்தியை எதிர்க்கின்றன. தர்ம உபதேசத்தை நான் நம்பிய போதிலும், பக்தி இன்னும் ஒரு போராட்டமாகவே இருக்கின்றது. என் உள்ளத்தில் இன்னும் பக்தி எழவில்லை. நான் செய்த பாவங்களே இப்போது பக்திக்கு இடையூறாக இருக்கின்றன.

நீண்ட காலம் பாவத்தில் இன்பத்தைக் கண்டு பழகிவிட்ட என் உள்ளத்தில் பக்தி எழுவது கடினமாகவே இருக்கின்றது. மனத்தால் நான் இறைவனை எண்ணி, , பாவங்களுக்கு மன்னிப்புக் கோரிய போதிலும், இந்தக் கோரிக்கை இன்னும் என் உள்ளத்தில் இருந்து எழவில்லை. “பாவம் செய்தோமே!" என என் உள்ளம் அழுது புலம்பவில்லை. உள்ளம் இருண்டு கிடப்பது போலவும் பாறைபோல் இறுகிக் கிடப்பது போலவும் எனக்குத் தோன்றுகிறது. பாவ கருமங்களைச் செய்து இருண்டு கிடக்கும் என் உள்ளத்தில் பக்தி எழுவது அவ்வளவு எளிதல்ல என்பதை இப்போது நான் உணருகிறேன்.

முன்பு நான் அக்கிரமம் செய்தேன். எளியோரையும் குற்றமற்ற நிரபராதிகளையும் அப்பாவிகளையும் தண்டித்துத் துன்புறுத்தினேன். என் தண்டனைக்கு முன் அவர்கள் அஞ்சி

நடுங்கினார்கள். அன்று அவர்கள் என் தண்டனைக்கு முன் அஞ்சி நடுங்கியது போல், இன்று நான் இறைவனின் தண்டனைக்கு முன் அஞ்சி நடுங்குகிறேன். தூக்குத் தண்டனையை எண்ணும் போதெல்லாம் என் மனம் அச்சத்தால் நடுங்குகிறது. பயங்கரக் காட்சிகள் மனத்தில் தோன்றி என்னை வருத்துகின்றன.

சில சமயங்களில், என் கழுத்தில் சுருக்கை மாட்டி என்னைத் தூக்கிலிடுவது போலவும், மூச்சு விட முடியாமல் நான் துடிப்பது போலவும் கனவு கண்டு, பீதியால் அலறிக் கொண்டு விழிப்பேன். இப்படி எல்லாம் என் பாவங்கள் இப்போது என்னை அல்லும் பகலும் வருத்தித் துன்புறுத்துகின்றன.

மனத்தால் நான் தர்ம உபதேசத்தை நம்பிய போதிலும், உள்ளத்தில் இன்னும் பக்தி எழவில்லை. இதுதான் உண்மை. துன்பத்தைத் தாங்கும் மனவலிமையைப் பக்தி தரும் எனத் தாங்கள் கூறியிருந்தீர்கள். ஆனால் நான் செய்த பாவம், துன்பம் வருத்தும் இந்நேரத்தில் பக்தியின் ஆறுதலும் இல்லாது பரிதவிக்கின்றேன்.

முன்பு இன்பமாய்த் தோன்றிய பாவம், இப்போது தீயினும் கொடியதாக என்னை வருத்துகிறது. பாவம் பழுத்துத் தன் துன்பப் பலனைத் தரும்போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது எனத் தாங்கள் கூறியது எவ்வளவு உண்மை! தப்பிக்கும் வழி எங்கும் இல்லை. பாவங்களைச் செய்தேனே, ' என என்னையே நான் நொந்து

கொள்வதைத் தவிர வேறு என்னதான் செய்வது? பாவம் செய்வோரின் கதி இதுதான்.

“பாவம் பழுத்துப் பலனளிக்காத வரையில் மூடன் அதைத் தேன் என்று விரும்புகிறான்; ஆனால், அது பழுத்துப் பலனளிக்கையில் அவன் ஆறாத் துயரை அடைகிறான்." எனத் தாங்கள் கூறியது எவ்வளவு உண்மை!

"பாவம் பலனளிக்க ஆரம்பிக்காதவரை இன்பமாய்த்தான் தோன்றும்; ஆனால் பலனைக் கொடுக்கும்போது, பாவி தன் பாவத்தை உணருகிறான்,” என்றும் தாங்கள் கூறியிருந்தீர்கள்.

முன்பு பாவம் இன்பமாய்த் தோன்றியது. அப்போது அது பலனளிக்க ஆரம்பிக்கவில்லை. இப்போது அது பலனைத் தர ஆரம்பித்துவிட்டதால், என் பாவத்தை நான் உணருகிறேன்.

இதையெல்லாம் முன்பே அறியாமல் இருளில் வாழ்ந்து வந்துள்ளோமே என எண்ணும்போது என் உள்ளத்தை வேதனையும் துக்கமும் வருத்துகின்றன.

“பாவங்களைச் செய்தோமே,” என என்னையே நான் நொந்து கொள்ளும் இச்சமயங்களில், எதனால் என் வாழ்வு இவ்வாறு கெட்டழிந்தது என நான் எண்ணுவது உண்டு.

என் தந்தை அறநெறிகளில் நாட்டமில்லாதவர். எவ்வகையிலேனும் பொருளும் இன்பமும் தேட வேண்டுமென்ற

கொள்கையைப் பின் பற்றியவர். நடத்தையில் ஒழுக்கமில்லாதவர் என்றும் கூறலாம். இறைவனின் நியதியிலும், இறைவனின் தண்டனையிலும், அடுத்த உலகிலும் அவருக்கு நம்பிக்கை இருந்ததா என்பதில் எனக்கு ஐயம் ஏற்படுகிறது.

என் தாய் தர்ம உபதேசங்களைக் கேட்டதே இல்லை எனக் கூறலாம். ஏதோ, சில சடங்கு சம்பிரதாயங்களைச் செய்வதுதான் அவர் பக்தி.

எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவள் மூன்று வயது இளையவள். அவளும் என் தாயைப் போல் தர்ம உபதேசங்களையும் பக்தியையும் அறியாதவள்.

தாங்கள் கூறியது போல் நாங்கள் எல்லாரும் "இருளில் வாழ்ந்தவர்கள்." சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களை அறியாமல், பல தவறான கொள்கைகளைப் பின் பற்றி, பயனற்ற சடங்கு சம்பிரதாயங்களைச் செய்வதைப் பக்தி எனக் கொண்டு, இருளில் வாழ்ந்தோம். இதுதான் எங்கள் குடும்பம்.

என் தந்தை இறந்துவிட்டார். என் தாய் என் கதியை எண்ணி அழுதுகொண்டிருக்கிறார். என் தங்கை தான் விரும்பிய ஒருவனோடு ஓடிவிட்டாள். அவள் எங்கு இருக்கிறாள்; என்ன கதியானாள் என்பது எனக்குத் தெரியாது. நானும் இன்னும் சில தினங்களில் தூக்குக் கயிற்றில் தொங்க வேண்டும். இது தான் எங்கள் குடும்பத்தின்

கதை, என அவன் தன் குடும்பத்தைப் பற்றிச் சில விவரங்களைச் சமூகப் பணியாளரிடம் கூறினான்.

பாசம், பற்று, துக்கம், துயரம் ஆகியவை அவன் உள்ளத்தை வருத்தின போலும். அவன் கண்கள் இரண்டும் கலங்கின. சமூகப் பணியாளர் தான் கண்கள் கலங்குவதைக் காணக் கூடாதெனக் கருதியவன் போல் தலையைக் குனிந்து கொண்டான். ஆனால் அவனால் துயரத்தை அடக்க முடியவில்லை. கண்ணீர் சொட்டுச் சொட்டாகத் தரையில் உதிர்ந்தது. ஏதோ, எண்ணங்களில் மூழ்கி, தலை குனிந்து, கண்ணீர் சிந்தி, அமைதியாக அமர்ந்திருந்தான்.

சிறிது நேரம் கழித்து, தலையை நிமிர்த்தி, சமூகப் பணியாளரைப் பார்த்து, "எங்கள் குடும்பம் கெட்டதற்கும் என் தங்கையின் வாழ்வு கெட்டதற்கும் என் வாழ்வு கெட்டதற்கும் காரணம் என் தாயும் தந்தையும்தான்," என இப்போது நான் உறுதியாக நம்புகிறேன் எனக் கூறினான்.

"அது எப்படி உன் பெற்றோர்தான் காரணம் என உறுதியாகக் கூறுகிறாய்?" எனச் சமூகப் பணியாளர் கேட்டார்.

## *2.2 என் தந்தை*

என் தந்தை பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆரம்பப் பள்ளிக்கு மேல் கல்வி கற்கவில்லை எனக் கூறிக் கொள்வார். கல்விக்கு அவர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. நல்ல நூல்களைப் படிப்பதையோ, நல்ல உபதேசங்களைக் கேட்டதையோ நான் பார்த்ததில்லை.

கல்வி அறிவு இல்லாத என் தந்தை, தம்மை மிகவும் கெட்டிக்காரரர் என எண்ணி, இறுமாப்புக் கொண்டிருந்தார். இவரை அறிவுடையவர் எனக் கூற முடியாது. தம் மடைமையை உணராதவர் என்றுதான் கூற வேண்டும். தன் மடைமையை உணராததால், தன்னை அறிவாளி என எண்ணி இறுமாப்புக் கொண்டிருந்தாரே தவிர, இவரை அறிவுடையவர் என்று நான் கூற மாட்டேன்.

இவரின் இறுமாப்புக்கும் கர்வத்துக்கும் காரணம் தாம் நிறைய சம்பாதிக்கிறோம் என்ற செருக்குதான். என் தந்தை லாரி ஓட்டுபவர். இவரின் ஊதியம் அப்படி ஒன்றும் பெரிதல்ல. ஆனால், களவும் கடத்தலும் இவருக்குக் கைவந்த கலை. அதுவே இவரின் இயல்பான குணமாக இருந்து வந்தது. இதில் இவருக்கு நிறைய வருமானம் கிடைத்து வந்தது. கல்வி கற்று உத்தியோகம் செய்யும் தம்முடைய பள்ளி நண்பர்களைவிட அதிகம் சம்பாதிப்பதாகப் பிறரிடம் பெருமையாகக் கூறிக் கொள்வார்.

அடக்கம், வணக்கம், மரியாதை, நேர்மை, நீதி,

நியாயம், மன்னிப்பு, பிறர் பிழை பொறுத்தல், இவை எல்லாம் இவருக்குப் பொருந்தாத பண்புகள். நீதி நியாயத்திற்குக் கட்டுப்படாதவர். பிறர் என்னதான் நியாயம் கூறினாலும் ஏற்க மாட்டார்.

மடைமையும், தாம் அதிகம் சம்பாதிக்கிறோம் என்ற செருக்கும் சிறுமைக் குணமும் இவரை இழிவானவராக்கியது. இவரின் கூற்றில் உண்மையில்லை எனப் பிறர் எடுத்துரைத்தாலும், ஏற்றுக் கொள்ளமாட்டார். கூச்சலிட்டடு, ஆரவாரம் செய்து, தம் கூற்றே நியாயமானது எனச் சண்டை சச்சரவு செய்வார்; சினங்கொண்டு கடுஞ்சொற்களால் பிறரைப் பழித்து, இகழ்ந்து பேசுவார்.

தங்களின் தர்ம உபதேசங்களைக் கேட்டதால், என் தந்தை வெறுக்கத் தக்க மனிதர் என்பதை இப்போது நான் உணர்கிறேன். ஒரு கொடிய நோயைப் போல் என் தந்தையைச் சிலர் வெறுத்தார்கள். துர்நாற்றமடிக்கும் ஒரு குப்பை மேட்டைப் போல் என் தந்தையைக் கண்டு சிலர் விலகிக் கொள்வார்கள். முரடன், புத்தியில்லாதவன், வம்பு வளர்ப்பவன், மரியாதை தெரியாதவன் எனப் பலர் இவரைக் கருதினார்கள். அப்போது தந்தை மேல் இருந்த பாசத்தால், அவர்களிடம் நான் பகை பாராட்டினேன். இப்போது, அறிவுடைமையால்தான் என் தந்தையை அவர்கள் அணுகவில்லை என்பதை உணருகிறேன்.

கற்றாரையும் நல்லாரையும் என் தந்தை விரும்பவில்லை. இவர் மிகவும் கர்வம் கொண்டிருந்தார்.

வணக்கமும் மரியாதையும் இல்லாதவர்; முத்தோரிடம் அன்பும் அடக்கமும் காட்டாதவர். மரியாதைக்குரியோரை மதிக்காதவர்; வணக்கத்துக்குரியோரை வணங்காதவர். நல்லாரையும் நல்லாரின் அடக்கத்தையும் ஒழுக்கத்தையும் பரிகசித்துக் கேலி செய்வதில் இவர் இன்பம் அடைவார்.

அடக்கம், வணக்கம், மரியாதை, நேர்மை தயாள சிந்தனை, பொறுத்தல் போன்ற பண்புகளையுடைய நல்லாருடன் இவர் கூடிப் பழகுவதில்லை. தப்பித் தவறி எவராவது இவருடைய குற்றங்களை எடுத்துக் கூறி, நல்ல அறிவுரை கூற முயன்றால் அவர்களை மட்டம் தட்டிப் பேசுவார்.

இவரைப் போன்ற குருட்டுப் புத்திக்காரர்களின் ஆலோசனையும் அறிவுரையும் இவருக்குத் தேன் போல் இனிக்கும். குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடுவது போல், இவரும் இவரின் நண்பர்களும் தம் மடைமையில் களிப்புற்றதை இப்போது எண்ணும்போது வேதனையாக இருக்கின்றது.

"இனம் இனத்தோடு சேரும்" எனத் தாங்கள் கூறியது போல், என் தந்தையின் தோழர்கள் யாவரும் இவரைப் போலவே குருட்டு மக்கள். சில இரவுகளில் எல்லாரும் எங்கள் வீட்டில் கூடி, மதுபானம் அருந்திக் கொண்டு, ஒழுக்கக் கேட்டினால் தங்களுக்குக் கிடைத்த பொருளையும் இன்பத்தையும் பற்றிப் பேசிப் பூரித்து மகிழ்வார்கள்.

ஒருவரின் ஒழுக்கக் கேட்டை மற்றவர் புகழ்வார். மற்றவரின் ஒழுக்கக் கேட்டை அடுத்தவர் புகழ்வார். ஆனால்

எவரும் மற்றவரின் ஒழுக்கக் கேட்டை குற்றம் எனக் கூறி மறுப்புத் தெரிவிப்பதில்லை. அப்படிப் பட்ட குருட்டு மக்கள் இவர்கள். இப்படி எல்லாம் இவர்கள் பேசுவதை மிகவும் ஆர்வத்துடன் நான் கேட்டுக் கொண்டிருப்பேன்.

என் தந்தை என் தாயாரை அடித்துக் கொடுமைப் படுத்தினார். சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் சிடு சிடுவெனக் கோபம் கொள்வார். ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி திட்டி, கடுஞ்சொற்களால் ஏசுவார். ஆத்திரத்தில் அறிவிழந்து அடித்துக் கொடுமைப் படுத்துவார்.

என் தாயாரிடம் பேசும்போதெல்லாம், அதிகாரத்தில் ஆணையிடுவது போல்தான் பேசுவார். அன்பான, அனுதாபமான சொற்களைப் பேசுவது மிக அபூர்வம்.

சில சமயங்களில் மிகவும் முரட்டுத்தனமாக என் தாயாரை அடித்துவிடுவார். முகம் வீங்கி வலி தாங்க முடியாமல், வீட்டு வேலைகளைச் செய்யாமல் என் தாயார் படுக்கையில் படுத்துக் கிடப்பார். அச்சமயங்களில் இவர் என் தாயாருக்கு அரைப் புட்டி பிராந்தி வாங்கி வந்து கொடுப்பார். என் தாயாருக்கு அவர் காட்டிய அன்பும் அனுதாபமும் இதுதான்.

ஒருமுறை என் தாயாரை இவர் அடிக்கும்போது, நானும் என் தங்கையும் "அம்மாவை அடிக்காதீர்கள்" என அழுது கூச்சலிட்டோம். எங்கள் கூச்சலைக் கேட்ட அடுத்த வீட்டுக்காரரர், ஓடி வந்து என் தந்தையைச் சமாதானப் படுத்த முயன்றார்.

ஆனால் என் தந்தை, "என் மனைவி, நான் அடிக்கிறேன். நீ யார் அதைக் கேட்பதற்கு? எவன் எவனோ எனக்கு அறிவு சொல்ல வருகிறான்," என அவரைக் கடிந்தார். வந்தவரும் நமக்கு ஏன் இந்த வம்பு என்று எண்ணியவராய்த் திரும்பிச் சென்றுவிட்டார்.

இப்படிப் பட்டவர்தான் என் தந்தை.

"வெட்கமின்றி காகத்தைப் போல் துணிவுடையவனுக்கும் வம்பு வளர்ப்பவனுக்கும் புறங்கூறுபவனுக்கும் முரடனுக்கும் தூர்த்தனுக்கும் வாழ்க்கை எளிதாகவே இருக்கிறது." எனத் தாங்கள் கூறினிர்கள்.

இது என் தந்தைக்கு மிகவும் பொருந்தும். என் தந்தைக்கு வாழ்க்கை எளிதாகவே இருந்தது. என் தந்தைக்கு வாழ்க்கை எளிதாக இருந்ததன் காரணமும் இப்போது எனக்கு விளங்குகிறது. ஒழுக்கக் கேட்டில் சென்று மனசாட்சி இல்லாமல் வாழ்ந்தார் என்பதுதான் உண்மை.

“ஆனால், நாணமுள்ளவனுக்கும் அறநெறியில் நாட்டமுள்ளவனுக்கும் சுயநலமற்றவனுக்கும் அகங்காரமற்றவனுக்கும் தூயோனுக்கும் வாழ்க்கை கஷ்டமாகவே இருக்கின்றது.” என்றும் தாங்கள் கூறினீர்கள்.

இது எவ்வளவு உண்மை! தங்களுடைய தர்ம உபதேசத்தைக் கேட்டதால், இதையும் இப்போது நான் உணருகிறேன்.

அறநெறிகளை அலட்சியப் படுத்தி, அடக்கமில்லாமல் ஒழுக்கக் கேட்டில் சென்று, பொருளும் இன்பமும் தேடிய என் தந்தைக்கு வாழ்க்கை எளிதாகவே தோன்றியது.

இதைத்தான் என் தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்தார். அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டது இதுதான்.

## 2.3 என் தாயார்.

என் தாயார் தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர். தோட்டப் பள்ளியில் நான்கு ஆண்டுகள் படித்ததாகவும் தமக்குப் படிப்பு வரவில்லை" என்றும் கூறிக் கொள்வார். தாம் கல்வி கற்காததை அவர் ஒரு குறையாகக் கருதியதே இல்லை. என் தந்தையைப் போலவே, இவரும் நல்ல நூல்களைப் படித்ததையோ நல்லுபதேசங்களைக் கேட்டதையோ நான் பார்த்ததில்லை.

தங்களுடைய தர்ம உபதேசத்தைக் கேட்ட பின், பாரபட்சம் பாராமல் அறிவுக் கண் கொண்டு நோக்கும்போது, என் தாய் ஒரு மந்த புத்திக்காரி என்றே எனக்கு இப்போது தோன்றுகிறது. பெற்ற தாயை இழிவாகப் பேசுவதாகக் கருத வேண்டாம். அறிவுத் தெளிவு பெற்றதால் உண்மையைப் பேசுகிறேன்.

நன்மை பயக்கக் கூடியவை எவை, தீமை விளைவிக்கக் கூடியவை எவை என ஆராய்ந்து அறியும் வல்லமை இல்லாதவர் என் தாய். அவரின் குறைபாடுகளை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறினாலும் அவற்றைக் கைவிடுவதற்கு முயற்சி எதுவும் செய்யாமல், அதிலேயே உழன்று கிடப்பார்.

என் தாயார் பகட்டையும் ஆடம்பரத்தையும் மிகவும் விரும்பினார். என் தந்தையிடம் ஒரு குணம் இருந்தது. வீட்டிற்காகத் தாராளமாகச் செலவு செய்வார். வீடு நிறைய சாதனங்கள் இருக்கும். மற்றப் பெண்கள் கண்டு பொறாமைப்படும் அளவுக்கு வீட்டில் அளவுக்கு அதிகமான சாதனங்கள் இருக்கும். பகட்டை விரும்பி, விலை உயர்ந்த சாதனங்களை வாங்கிக் குவித்தவர், அவற்றைப் பராமரிப்பதில் அக்கறை காட்டவில்லை.

சோம்பலும் ஒத்திப் போடுதலும் அவருடைய இயல்பான குணங்கள். சுறு சுறுப்பாகவும், வேலைகளைச் சீர்படுத்திச் செய்து முடிக்கும் ஒழுக்கமும் அவரிடம் இல்லை. இதன் காரணமாகவே, என் தந்தை அடிக்கடி சினங்கொண்டு அவரைத் திட்டுவார்.

என் தாயார் பேராசைக்காரி. உண்பதில் இன்பம் கண்டார். பலவகையான சுவைதரும் தின்பண்டங்களை வாங்கி, பாத்திரங்களில் அடைத்து வைத்திருப்பார். பெருந்தீனி தின்பவர் என்று கூடக் கூறலாம். உடல் பெருத்து நோய்கள் அவளை வருத்தின.

என் தாயார் உள்ளத்தில் குரோதம் நிறைந்தவர். பகை பாராட்டும் உள்ளம் கொண்டவர். சிடு சிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவார். வெறுப்பினாலும் பகைமையினாலும் சினத்தினாலும் பிறருக்குத் தீங்கு செய்வார்.

"குரோதம் உள்ளத்தை ஆட்கொண்டால், எண்ணத்திலும் சொல்லிலும் செயலிலும் அறம் இருக்காது; நீதி இருக்காது. அநியாயமே மிகுந்திருக்கும். மற்றவர்களுக்குத் துன்பமிழைப்பதில் மனம் மகிழும்," எனத் தாங்கள் கூறினீர்கள். இது என் தாயாருக்கு மிகவும் பொருந்தும்.

அவரின் சுபாவம் வெறுக்கத் தக்கது என்றே இப்போது எனக்குத் தோன்றுகிறது. காரணமின்றி பிறரிடம் பகை பாராட்டி வெறுப்பைக் காட்டுவார். அடக்கம், மன்னிப்பு, பொறுத்தல், இவை யாவும் அவருக்குப் பொருந்தாத பண்புகள். ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். அதிலிருந்து அவரின் குணத்தை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

நாங்கள் வசித்து வந்தது ஒரு மலிவு வீடு. அப்பகுதியில் சுமார் ஐம்பது மலிவு வீடுகள் இருந்தன. அங்குக் குடியிருந்த எல்லாருமே இந்தியக் குடும்பத்தினர்.

நான் பள்ளியில் மூன்றாம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கும்போது, பக்கத்து வீட்டிற்கு ஒரு குடும்பம் குடி வந்தது. கணவன் மனைவியுடன் ஒரு மூன்று வயது குழந்தை; இதுதான் அந்தக் குடும்பம். கணவன் மனைவி இருவரும் தொழிற்சாலையில் வேலை செய்தார்கள். காலையில்

இருவரும் வேலைக்குச் சென்றுவிடுவார்கள். குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு மற்றொரு குடும்பத்தில் ஏற்பாடு செய்து, அதற்கு ஒரு தொகையும் கொடுத்தார்கள்.

ஆரம்பத்தில் என் தாயார் புதிதாகக் குடி வந்தவளுடன் நட்பாகத்தான் இருந்தார். எதனாலோ அந்தப் பெண்ணிடம் இவர் வெறுப்பை வளர்த்துக் கொண்டார். அந்தப் பெண் சிறிது படித்தவள்; பார்ப்பதற்கு இலட்சணமாக இருப்பாள். இதனால் தானோ, அல்லது குழந்தையைத் தன்னிடம் விடவில்லை என்பதனாலோ, அல்லது அவள் வேலை செய்து சம்பாதிக்கிறாள் என்ற பொறாமையினாலோ, ஏதோ காரணத்தால் அந்தப் பெண்ணிடம் இவர் வெறுப்பை வளர்த்துக் கொண்டார்.

அந்தப் பெண்ணிடம் பேசுவதை இவர் நிறுத்திக் கொண்டார். அந்தப் பெண்ணே இவரிடம் ஏதாவது பேசினாலும் இவர் விர்ரென்று வீட்டிற்கு வந்து, கதவைப் படார் என்று சாத்திக் கொள்வார். நானோ என் தங்கையோ அந்தப் பெண்ணிடம் பேசிவிட்டால், அந்தப் பெண்ணிற்கு எதிரிலேயே எங்களைத் திட்டி அடிப்பார். இத்துடன் அவரது வெறுப்பு நிற்கவில்லை.

வீட்டைக் கூட்டி, குப்பையை வேலிக்கு மறுபுறம் அண்டை வீட்டு வாசலில் கொட்டுவார். சில சமயங்களில் குப்பைத் தொட்டியில் போடவேண்டிய குப்பைகளையும் வேலிக்கு மறுபுறம் வீசி எறிவார்.

என் தாயாரின் அடாத செயல்களைக் கண்ட அண்டை வீட்டினர் சிலர், குப்பையைக் கொட்டுவது என் தாயார்தான்

என்று அந்தப் பெண்ணிடம் கூறினார்கள். அப்படியிருந்தும் பக்கத்து வீட்டார் பொறுத்துக் கொண்டிருந்தனர். இதை அறிந்த என் தாயாருக்கு அந்தப் பெண்ணின்மேல் மேலும் வெறுப்பு கூடியது போலும் மேலும் அதிகமாகக் குப்பைகளைக் கொட்டினாள்.

ஓர் இரவு என் தந்தை வேலை முடிந்து வீட்டிற்கு வந்த போது, பக்கத்து வீட்டுக்காரர் என் தாயாரின் செயலைக்கூறி முறையிட்டார். என் தந்தை "என் மனைவி உங்கள் வீட்டு வாசலில் குப்பையைக் கொட்டியதை நீங்கள் பார்த்திர்களா? யாரோ சொன்னதைக் கேட்டு வம்புக்கு வரவேண்டாம்' என அவரைக் கடிந்துவிட்டு, வீட்டிற்குள் நுழைந்தவர் என் தாயாரைக் கூப்பிட்டு அது சம்பந்தமாகக் கேட்டார்.

என் தாயார் கொஞ்சமும் தயங்காமல், அவன் வீட்டுக் குப்பையை நம் வீட்டில் கொட்டினாள். அவள் வீட்டுக குப்பையை அவள் வீட்டிலேயே கொட்டினேன். " என அந்தப் பெண்ணின் மேல் அபாண்டமாகப் பழியைச் சுமத்தினார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் தங்கை அப்பா, அம்மாதான் தினமும் அவர்கள் வீட்டில் குப்பையைக் கொட்டினார். அவர்கள் நம் வீட்டில் குப்பையைக் கொட்டவே இல்லை," என்றாள். இதைக் கேட்ட என் தந்தை, பளிரென என் தாயாரைக் கன்னத்தில் அறைந்துவிட்டார்.

என் தாயாரின் குற்றத்தை அறிந்த பின்னும் என் தந்தை பக்கத்து வீட்டுக்காரருடன் சமாதானம் செய்து கொள்ளவில்லை. அவரின் அகந்தை அவ்வளவு பெரியது.

மறுநாள் என் தாயார் என் தங்கையைப் பழி வாங்கினார். ஓர் இரும்புக் கம்பியை நெருப்பில் சூடேற்றி, என் தங்கை கதறக் கதற காலில் சூடு வைத்தார். அத்துடன் அவர் பகை தணியவில்லை. மந்த புத்தியும் குரோதமும் அவரை ஓர் அரக்கியாகவே மாற்றிவிட்டன.

அண்டை வீட்டார் ஒரு பூனையை வளர்த்து வந்தனர். அது குட்டிகளை ஈன்றிருந்தது. ஒரு குட்டி எவ்வாறோ எங்கள் வீட்டிற்குள் வந்துவிட்டது. என் தங்கை அந்தப் பூனைக் குட்டியோடு விளையாடிக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட என் தாயார், பூனைக்குட்டி யாருடையது எனக் கேட்க, அண்டை வீட்டாருடையது என என் தங்கை பதிலிறுத்தாள்.

இதைக் கேட்டதும் வெறுப்பும் பகையும் அவரை ஆட்கொண்டன. அந்தக் குட்டியை என் தங்கையிடமிருந்து பிடுங்கி, வேலிக்கு மறுபுறம் அண்டை வீட்டிற்குள் வீசி எறிந்தாள். அது சுவரில் மோதி விழுந்து இறந்துவிட்டது.

பிறகு எங்களிடம் “யாரிடமாவது சொன்னீர்கள் என்றால், உங்களின் இரு கால்களிலும் சூடு வைப்பேன்," என எச்சரித்தார். அந்தப் பூனைக் குட்டி, வாயிலிருந்து இரத்தம் வழிய இறந்து கிடந்ததைப் பார்த்த என் தங்கை அன்று முழுதும் அழுதுகொண்டே இருந்தாள். நான் கூறிய இந்த ஒரு சம்பவத்திலிருந்தே என் தாயாரின் குணத்தைத் தாங்கள் யூகித்துக் கொள்ளலாம். இப்படிப்பட்டவர்தாம் என் தாயார்.

அண்டை வீட்டுக்காரி இவருடைய நட்பை விரும்பினாள். அவள் இவருக்கு எந்தவித துன்பமும் செய்யாத

போதிலும் அவளுடன் என் தாயார் பகைமையே கொண்டிருந்தார். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவளுக்குத் தீங்கு செய்து வந்தார். இத்தகைய குணமுள்ள என் தாயாருக்கும் தோழிகள் இருந்தார்கள்.

வெட்டிக் கதை பேசுவதும் ஊர்க்கதை பேசுவதும் கதை கட்டிக் குடும்பங்களைக் கெடுப்பதுவும் இவைதாம் இவர்களுக்குப் பொழுது போக்கு . இவர்கள் அதில் களிப்புற்று மகிழ்ந்தார்கள். வழியில் கொட்டிய குப்பை போல, குருட்டு மக்கள் இவர்கள் என்பதை இப்போது நான் உணருகிறேன்.

என் தாயாரிடம் சில நல்ல குணங்களும் இருந்தன. விருந்தோம்பல் அவரிடமிருந்த நல்ல பண்பு ஆகும். உறவினர், அறிமுகமானவர்கள், நண்பர்கள் வீட்டிற்கு வந்தால், முக மலர்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பார்.

பிச்சைக்காரர்கள், ஏழை எளியோர் யாசித்து வந்தால் கடிந்து கொள்ளமாட்டார். உணவோ, பொருளோ கொடுத்து உதவுவார்.

நாங்கள் வாழ்ந்தவிடத்தில் ஓர் அனாதைப் பெண்மணி இருந்தாள். அவளுக்கு வயதாகிவிட்டது. கணவர் இறந்துவிட்டார். பிள்ளைகளும் அவளைப் புறக்கணித்துவிட்டனர்.

என் தாயார் அவளுக்கு அடிக்கடி உணவு கொடுத்தனுப்புவார். என்னிடம்தான் கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்வாள். அப்போது நான் சிறு பையனாக இருந்தேன். நான் அந்தப்

பெண்ணைப் "பாட்டி" என்று அழைப்பேன். நான் உணவைக் கொண்டுபோய்க் கொடுத்த போதெல்லாம் அந்தப் பெண் என்னை வாழ்த்தி, கட்டியணைத்து முத்தம் கொடுப்பார். அது எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தரும். ஓடி வந்து அதை என் தாயாரிடம் கூறுவேன்.

என் தாயாரிடமிருந்து நான் கற்றுக் கொண்ட ஒரு நல்ல பண்பு இதுதான். பிற்காலத்தில், நான் பெரியவன் ஆனபோது, அனாதைகளுக்கும் வறுமையால் வாடியோருக்கும் உணவும் பொருளும் கொடுத்து உதவ இந்தப் பண்பே என்னைத் தூண்டியது. அதில் நான் பெரிதும் மகிழ்வேன்.

## 2.4 எங்களுடைய பக்தி

எங்கள் வீட்டின் ஒரு மூலையில் என் தாயார் சில சாமி படங்களை வைத்திருந்தார். அங்கு ஒரு விளக்கும் ஊதுவத்தியும் திருநீறும் இருக்கும். விளக்கை ஏற்றி, ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்து, நெற்றியில் திருநீற்றைப் பூசிக்கொள்வார். இதையும் தினமும் முறையாகச் செய்வதில்லை.

நான் பள்ளிக்குப் போகுமுன், சாமி படங்களுக்கு முன் இருந்த திரு நீற்றை நெற்றியில் பூசிக் கொள்வேன். இவ்வளவுதான் என் பெற்றோர் எனக்குக் கற்றுக் கொடுத்த

பக்தி. இந்தப் பழக்கத்தையும் நாளடைவில் நான் கைவிட்டுவிட்டேன்.

என் தந்தைக்கு இந்தப் பழக்கம்கூட இல்லை. ஆனால் அவர் தம் லாரியில் ஒரு சாமி படம் வைத்திருந்தார். அவரின் பக்தி இவ்வளவுதான்.

தாங்கள் கூறியதுபோல், நாங்கள் அனைவரும் “இருளில் வாழ்ந்தோம்." சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களை அறியாமல், பல தவறான கொள்கைகளைப் பின்பற்றி, பயனற்ற சடங்கு சம்பிரதாயங்கள் செய்வதைப் "பக்தி” எனக்கொண்டு அறியாமையில் உழன்று கிடந்தோம்.

இவ்வுலகில் இருவகை நோய்கள் உண்டு எனத் தாங்கள் கூறினீர்கள். அவற்றில் ஒன்று உடலின் நோய். உடலின் நோய் உடல் நலத்தைக் கெடுக்கும். தக்க மருந்தைக் கொண்டு உடலின் நோயைப் போக்கலாம் என்றும் கூறினீர்கள். இதை நாங்கள் அறிந்திருந்தோம். உடலுக்கு நோய் வந்த போதெல்லாம் மருத்துவரை நாடி, தக்க மருந்து கொண்டு நோயைப் போக்கினோம்.

மற்றொன்று மனத்தின் நோய் எனத் தாங்கள் கூறினீர்கள். மனத்தின் நோய் அறியாமை என்றும் இந்நோய் நம் வாழ்வை அழிக்கும் என்றும் தாங்கள் கூறியிருந்தீர்கள். இதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. இந்த நோய்க்கு நாங்கள் மருந்தைத் தேடவில்லை. எங்கள் குடும்பம் சீரழிந்து போனதற்கு இந்த அறியாமை என்னும் நோய்தான் காரணம்

என்பதை இப்போது நான் உணருகிறேன்.

அறியாமை என்னும் நோயைத் தீர்க்கும் மருந்துதான் சான்றோர் அருளிய தர்ம உபதேசங்கள் (நன்னெறி உபதேசங்கள்) எனத் தாங்கள் கூறினீர்கள். தர்ம உபதேசங்களைக் கேட்காததால், இப்படி ஒரு நோய் எங்களை வருத்துவதை அறியாமலேயே நாங்கள் “இருளில் வாழ்ந்தோம்” என்பதுதான் உண்மை.

இந்த நோய் எங்களை வருத்திய போதிலும் நாங்கள் இதை உணரவில்லை. ஏன்? தர்ம உபதேசத்தைக் கேட்காததால் இதை நாங்கள் உணரவில்லை. எங்கள் துன்பங்களுக்கெல்லாம் காரணம் அறியாமை என்னும் நோய்தான் என்பதை அறியாமல், இந்நோயைத் தீர்க்கும் மருந்து தர்ம உபதேசந்தான் என்பதையும் அறியாமல், தவறான போதனைகளை நம்பி, பயனற்ற சடங்கு சம்பிரதாயங்களில் மருத்துவத்தை நாடினோம்.

ஆனால், இந்த நோயோ படிப்படியாக வளர்ந்து, பெரும்பிணியாக மாறி, எங்கள் குடும்பத்தையே அழித்துவிட்டது.

வசதியாக வாழ்வதற்குப் போதுமான அளவு என் தந்தை பொருளீட்டினார். எங்கள் குடும்பத்தில் வறுமை இல்லை. அவ்வட்டாரத்தில் வசதியாக வாழ்ந்த குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று எனக் கூறலாம். மகிழ்ச்சியாக வாழ்வதற்குப் போதுமான பொருள் இருந்தும் என் பெற்றோர் அருளைத்

தேடத் தவறிவிட்டதால், எங்கள் குடும்பத்தை இருள் சூழ்ந்து கொண்டது.

பொருள் இருந்தும் அருள் இல்லாததால், எங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் இல்லாது போயிற்று. தர்ம உபதேசங்களைக் கேட்காததால், அருளைத் தேடும் வழி அறியாமல் இருளில் வாழ்ந்தோம்.

எப்போதும் குடும்பத்தில் சண்டை சச்சரவுதான். சிறு சிறு விஷயங்களுக் கெல்லாம் என் தந்தை தாயாரிடமும் எங்களிடமும் சினத்தைக் காட்டுவார். கடுஞ்சொற்களால் திட்டிக் கூச்சலிடுவார். ஆத்திரத்தில் என் தாயாரை அடித்துக் கொடுமைப்படுத்துவார். என் தாயார் தம் கோபத்தைப் பிள்ளைகளிடம் காட்டுவார். நானும் என் தங்கையும் கடுஞ்சொற்களுக்கும் தண்டனைக்கும் அஞ்சி, அன்பிற்கு ஏங்கினோம்.

தங்களின் உள்ளம் இருண்டு கிடப்பதை என் பெற்றோர் உணரவே இல்லை. சாமி படத்திற்கு விளக்கு ஏற்றிய என் தாயார், இருண்டு கிடந்த தம் உள்ளத்தில் அருள் விளக்கை ஏற்றத் தவறிவிட்டார். அவரைக் குறை கூறுவதிலும் பயனில்லை. அவரோ கல்வியறிவு இல்லாதவர். பக்திக்கு அடிப்படை நல்லொழுக்கமும் நற்பண்புகளும் நற்குணங்களும்தான் என்பதை விளக்கி, அவருக்கு எவரும் போதனை செய்யவில்லை என்பதுதான் உண்மை. அவருக்கு எவரும் நல்வாழ்விற்கு வழி காட்டவில்லை என்பதுதான் உண்மை .

என் தந்தை லாரியில் சாமி படத்தை வைத்திருந்த போதிலும் உள்ளத்தில் அவருக்கு இறைவனின் நியதியிலும் இறைவனின் தண்டனையிலும் நம்பிக்கை இருந்ததில்லை. நம்பிக்கை இருந்ததில்லை எனக் கூறுவதைவிட, இறைவனின் நியதியை அறியாமல் வாழ்ந்தார் எனக் கூறுவதுதான் பொருந்தும். இறைவனின் நியதியை அவருக்கு எவரும் போதனை செய்ததில்லை. இறைவனின் நியதியை விளக்கி அவருக்குப் போதனை செய்திருந்தால், ஒருவேளை அவர் நல்வாழ்வு வாழ்ந்திருக்கக் கூடும்.

என் தாயும் தந்தையும் நானும் என் தங்கையும் இறைவனின் நியதியை அறியாமல் வாழ்ந்தோம். தர்ம உபதேசங்களைக் கேளாததால், இறைவனின் நியதியை அறியாமல், வாழ்ந்தோம் என்பதுதான் உண்மை.

இறைவனின் நியதியை அறியாமல் வாழ்ந்த எங்கள் உள்ளத்தில் எப்படி பக்தி எழும்? எங்கள் உள்ளங்களில் உண்மையான பக்தி இருந்திருந்தால் நாங்கள் ஏன் தீயனவற்றில் மகிழ்ந்து, மனசாட்சியில்லாமல் பாவ கருமங்களைச் செய்தோம்?

ஆகவே, நாங்கள் எல்லாரும் உள்ளத்தில் உண்மையான பக்தியில்லாதவர்கள் என்பதுதான் உண்மையாகும். தாங்கள் கூறியதுபோல் நாங்கள் இறைவனை மறந்துவிட்டவர்கள்." தர்ம உபதேசங்களைக் கேளாததால் இறைவனின் நியதியை அறியாமல், பயனற்ற சடங்கு சம்பிரதாயங்களைச் செய்வதைப் 'பக்தி' எனக்

கொண்டு அறியாமையில் உழன்று கிடந்தோம் என்பதே உண்மை.

“பேதை தன் மடைமையை உணர்ந்தால், அந்த அளவுக்கு அவன் அறிவு உள்ளவன்; தன்னை அறிவாளியாக எண்ணிக் கொள்ளும் பேதை முழு மூடனேயாவான்,” எனத் தாங்கள் கூறினீர்கள்.

இது என் தாய்க்கும் பொருந்தும்; என் தந்தைக்கும் பொருந்தும்; எனக்கும் பொருந்தும்; என் தங்கைக்கும் பொருந்தும். நாங்கள் எங்கள் மடைமையை உணரவில்லை. சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களைக் கேட்டிருந்தால், ஒருவேளை நாங்கள் எங்கள் மடைமையை உணர்ந்திருப்போம்.

ஆனால், நாங்கள் தர்ம உபதேசங்களைக் கேட்டதேயில்லை. தர்ம உபதேசம், ஒருவனை அறியாமையிலிருந்து மீட்டு, நல்வாழ்விற்கு வழிகாட்டும் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. எங்களைக் குறை கூறுவதில் பயனில்லை.

நாங்கள் வாழ்ந்த ஊரில் தர்ம உபதேசங்களை எவரும் போதனை செய்யவில்லை. எங்கள் ஊரிலுள்ள ஆலயங்களிலும் தர்ம உபதேசம் போதனை செய்யப்படவில்லை. இடையிடையே எங்கள் ஊருக்கு வந்த “மத குருக்களும்” எங்களுடைய அறியாமையை விளக்கி, நல்லுபதேசம் செய்து, நல்வாழ்விற்கு வழிகாட்டவில்லை. அவர்களும் சடங்கு

சம்பிரதாயங்களுக்கும் மந்திரங்களுக்கும் கிரியைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்களே தவிர, தர்ம உபதேசங்களைப் போதனை செய்து எங்களை அறியாமையிலிருந்து மீட்கவில்லை.

ஜாதகத்திலும் விசித்திரமான சடங்குகள் செய்து, தோஷம், தீட்டு போன்றவற்றைக் கழிப்பதிலும் "ஹோமம் வளர்த்து மந்திரங்களை ஓதி பாவங்களைக் கழுவுவதிலும்" இவர்களுக்கு இருந்த நம்பிக்கை, சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களில் இல்லை. இதைத்தான் "பக்தி" என அவர்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களைக் கல்வி கேள்விகளால் கற்றுணராத எங்களுக்கு, "பக்தி" என்பது என்னவென்று தெரியவில்லை; அறம் என்னவென்று தெரியவில்லை; பாவம் எது, புண்ணியம் எது எனத் தெரியவில்லை; தீவினை எது, நல்வினை எதுவெனத் தெரியவில்லை; நல்லொழுக்கம் எது, தீயொழுக்கம் எது எனத் தெரியவில்லை; நன்மை பயக்கக்கூடியவை எவை, தீமை விளைவிக்கக்கூடியவை எவை எனத் தெரியவில்லை.

தர்ம உபதேசங்களைக் கேளாததால், “இறைவனின் நியதியை” அறியாமல் வாழ்ந்து வந்தோம். பாவம், புண்ணியம், நல்வினை, தீவினை, வினைப்பயன், இறைவனின் தண்டனை அடுத்த உலகம் இவற்றை எல்லாம் அறியாமல் வாழ்ந்தோம்.

இவற்றை அறியாது வாழ்ந்த நாங்கள், தவறான

போதனைகளை நம்பி, தவறான கொள்கைகளைப் பின்பற்றி வந்தோம். பக்தி இல்லாத இடத்தில் பக்தியைக் கண்டோம்; அறம் இல்லாத இடத்தில் அறத்தைக் கண்டோம்; ஒழுக்கம் இல்லாத இடத்தில் ஒழுக்கத்தைக் கண்டோம்; கெடுதி விளைவிக்கக் கூடியவற்றை நன்மை பயக்கக் கூடியவை எனக் கொண்டோம்; நன்மை பயக்கக் கூடியவற்றைக் கெடுதி விளைவிக்கக் கூடியவை எனக் கொண்டோம். இவ்வாறெல்லாம் தவறாகக் கொண்டு, தீயொழுக்கத்தில் சென்று தீய கதியை அடைந்தோம்.

சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களைக் கேட்காததால், அறநெறிகளில் எங்களுக்கு நம்பிக்கை இல்லாது போயிற்று. அற நெறிகளில் நம்பிக்கை இல்லாததால், நாங்கள் தீயொழுக்கத்தில் சென்று, தீமையான எண்ணங்களை எண்ணி, தகாத சொற்களைப் பேசி, பாவ கருகங்களைச் செய்தபோது, மனசாட்சி எங்களை உறுத்தவில்லை. பழிக்கும் பாவத்திற்கும் எங்கள் உள்ளம் அஞ்சவில்லை; “பாவம் செய்கிறோமே! இறைவன் தண்டிப்பாரே! என உள்ளம் எங்களை உறுத்தவில்லை. மாறாக, பாவத்தில் கிடைத்த இன்பத்திலும் பொருளிலும் மயங்கி, உள்ளம் பாவத்தை மீண்டும் மீண்டும் நாடியது.

தர்ம உபதேசங்களைக் கேட்காததால், எங்களிடமிருந்த அசுத்தங்களை நாங்கள் உணரவில்லை; எங்களுடைய குற்றங்குறைகளை நாங்கள் உணரவில்லை; எங்கள் உள்ளம் மாசு படிந்திருந்ததை நாங்கள் உணரவில்லை; எங்களின் ஒழுக்கக் கேட்டை நாங்கள் உணரவில்லை.

செருக்கும், சினமும், சிறுமைக் குணமும் எங்கள் உள்ளத்தை ஆட்கொண்டிருந்தன. அப்படி இருக்கும்போது, எப்படி எங்கள் உள்ளத்தில் "பக்தி" எழும்?

ஆகவே, எங்களின்"பக்தி" பக்தியாகாது. இதையெல்லாம் தங்களின் தர்ம உபதேசங்களைக் கேட்டதால் இப்போது நான் உணருகிறேன்.

எங்கள் ஊரில் ஓர் ஆலயம் இருந்தது. வெள்ளிக் கிழமைகளில் என் தாயார் என்னையும் என் தங்கையையும் ஆலயத்திற்கு அழைத்துச் செல்வார். அங்கும் ஒழுக்கம் இருக்காது. ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாகக் கூடி ஊர்க் கதைகளையும் பிறர் குறைகளையும் பேசிக் கொண்டிருப்பார்கள். பிள்ளைகள் இங்குமங்கும் ஓடியாடி விளையாடிக் கூச்சலிட்டுக் கொண்டிருப்பார்கள். ஒலிபெருக்கி உரத்த சத்தத்துடன் சங்கீதத்தை முழங்கிக் கொண்டிருக்கும்.

அர்ச்சகர் மணி அடித்து மந்திரங்கள் ஓதி, விக்கிரகங்களுக்குத் தீபம் காட்டிப் பூசை செய்வார். எல்லாரும் கை கூப்பி வணங்குவார்கள். அர்ச்சகர் என்ன சொல்கிறார் என்பது எனக்குப் புரியாது. என் தாயாருக்கும் அது புரியவில்லை என்பதில் எனக்கு ஐயமில்லை. அங்குக் கூடியிருந்த மற்றவர்களுக்கும் அது புரியவில்லை என்பதுதான்உண்மை.

பிறகு அர்ச்சகர் அர்ச்சகர் ஒரு தட்டில் தீபத்துடன்

எல்லாருக்கும் திருநீறு கொடுப்பார். எல்லாரும் தீபத்தை வணங்கி, நெற்றியில் திருநீற்றை பூசிக்கொள்வார்கள். என் தாயாரும் தீபத்தை வணங்கி, திருநீற்றை இட்டுக் கொள்வார். பிறகு எனக்கும் என் தங்கைக்கும் நெற்றியில் திருநீற்றைப் பூசுவார். அதன் பிறகு பிரசாதம் வழங்கப்படும். பிரசாதத்தை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வருவோம்.

சில சமயங்களில் அர்ச்சகர் பூசை செய்தபின், சிலர் தேவாரப் பாடல்களைப் பாடிப் பஜனை செய்வார்கள். அதன் பொருள் எனக்கு விளங்காது.

ஆலயம் எங்களுக்குக் கற்றுக் கொடுத்த பக்தி இதுதான். இதையே என் தாயார் வீட்டிலும் செய்தார் அவரைப் பொருத்தமட்டும் இதுதான் "பக்தி.” நானும் இதையே பக்தி என நம்பி வளர்ந்தேன். எங்களைக் குறை கூறிப் பயனில்லை. நாங்கள் ஆலயத்திற்குச் சென்ற போதிலும், ஆலயம் எங்களுக்கு அறநெறிகளை உபதேசம் செய்து, நல்வாழ்விற்கு வழி காட்டவில்லை என்பதுதான் உண்மை. ஆலயம் எங்களை அறியாமையிலிருந்து மீட்கத் தவறிவிட்டது. பக்தியை எங்களுக்குப் போதனை செய்யத் தவறிவிட்டது.

ஆலயத்தில் சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களை எங்களுக்கு எவரும் போதனை செய்யவில்லை. அறநெறிகளை விளக்கி தெளிவுபடுத்தவில்லை. ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் நற்குணங்களையும் போதனை செய்யவில்லை. பாவம்,

புண்ணியம், நல்வினை, தீவினை இவற்றை எங்களுக்கு விளக்கித் தெளிவுபடுத்தவில்லை.

“பாவம் உண்டு, புண்ணியம் உண்டு, நல்வினை உண்டு, தீவினை உண்டு, நல்லொழுக்கம் உண்டு, தீயொழுக்கம் உண்டு, செயல்களுக்குப் பிற்பயன் உண்டு, அடுத்த உலகம் உண்டு, அடுத்த உலகில் உயிர்கள் தம் செயல்களின் பலனை அனுபவிக்க வேண்டும் ," என எங்களுக்கு விளக்கித் தெளிவுபடுத்தவில்லை.

"பாவ கருமங்களைச் செய்வோர் இவ்வுலக வாழ்விலும் துன்பப்படுவார்கள்; மரணத்திற்கு அப்பால், அடுத்த உலகிலும் நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ பிறந்து துன்பப்படுவார்கள்," எனப் பாவ கருமங்களைச் செய்வோரின் தீய கதியை எங்களுக்கு விளக்கித் தெளிவுபடுத்தவில்லை.

"குற்றங்களைத் தவிர்த்து, நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து, நற்கருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ்வோர், இவ்வுலக வாழ்விலும் சுகம் பெறுவார்கள்; மரணத்திற்கு அப்பால், அடுத்த உலக வாழ்விலும் தெய்வலோகத்தில் பிறந்து சுகம் பெறுவார்கள்," என அறநெறிகளைக் கடைப்பிடிப்போரின் நற்கதியை எங்களுக்கு விளக்கித் தெளிவுபடுத்தவில்லை.

நன்னெறிகளையும்; அடக்கம், வணக்கம், மரியாதை, பிறர் பிழை பொறுத்தல், மன்னிப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, நியாயம், தானம், தயாள சிந்தனை

போன்ற பண்புகளின் பெருமைகளை எங்களுக்கு விளக்கித் தெளிவுபடுத்தவில்லை. பக்திக்கு அடிப்படை நல்லொழுக்கமும் நற்பண்புகளும் நற்குணங்களும் என்பதை எங்களுக்குப் போதனை செய்யவில்லை.

“உயிர்களுக்குத் துன்பம் செய்ய வேண்டாம்; பிறர் பொருளைக் கொள்ளக் கருத வேண்டாம்; பிறர் மனைவியை நாட வேண்டாம்; பொய்யும் புறமும் பேச வேண்டாம்; கடுஞ்சொற்களை உரைக்க வேண்டாம்; சினமும் பகையும் கொள்ள வேண்டாம்; பிறர் செல்வாக்கைக் கண்டு பொறாமை கொள்ள வேண்டாம்; உயிர்களிடத்தில் அன்பு செலுத்துங்கள்; புண்ணிய கருமங்களைச் செய்யுங்கள். இதைக் கடைபிடித்தீர்கள் என்றால் இறைவனின் அருளைப் பெறுவீர்கள். உள்ளத்தில் பக்தி எழும். உள்ளம் தூய்மையடைந்து நல்ல கதிக்குப் போவீர்கள்,” எனத் தாங்கள் கூறினீர்கள். இப்படி ஆலயம் எங்களுக்கு உபதேசம் செய்யவில்லை. தூய்மையற்ற எங்களை நாங்கள் தூய்மைப் படுத்திக் கொள்வதற்கும் நல்ல கதியை அடைவதற்கும் ஆலயம் எங்களுக்கு வழிகாட்டவில்லை.

இப்படியெல்லாம் சான்றோர் அருளியுள்ள அறநெறி உபதேசங்களை எங்களுக்கு எவரும் விளக்கித் தெளிவுபடுத்தவில்லை. இது ஆலயத்தின் கடமையே என்றாலும் ஆலயம் இவற்றைச் செய்யத் தவறிவிட்டது, அதன் காரணமாக ஆலயம் சென்றும் நாங்கள் அறநெறிகளை அறியாமல் வாழ்ந்தோம். ஆலயம் சென்றும் இறைவனின் நியதியை அறியாமல் வாழ்ந்தோம். இறைவனின் நியதியை

அறியாது வாழ்ந்த நாங்கள், ஆலயம் சென்ற போதிலும் "இறைவனை மறந்து விட்டவர்கள்தாம்.

“பாவங்கள் செய்யாதே; நல்லனவற்றைச் செய்: மனத்தைத் தூய்மைப்படுத்து. இதுதான் இறைவனின் உபதேசம்," எனத் தாங்கள் கூறினீர்கள். இதை ஆலயம் எங்களுக்கு உபதேசம் செய்யவில்லை. புறத்தே சில சடங்குகளைச் செய்வதே பக்தி எனக் கற்றுக் கொடுத்ததால், என் தாயார் அதையே பக்தி எனக் கொண்டார். உள்ளத்தில் இருந்த அழுக்கை அவர் உணரவில்லை. நன்னெறிகளால் உள்ளத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை. இவற்றை உணராததால், ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும் தீயொழுக்கத்தில் சென்று, பழியையும் பாவத்தையும் அடைந்தார். நன்னெறிகளை உபதேசம் செய்து, நல்வாழ்விற்கு வழிகாட்டியிருந்தால், ஒருவேளை என் தாயார் நல்வாழ்வு வாழ்ந்திருக்கக் கூடும்.

என் நிலையும் இதுதான். என் தங்கையின் நிலையும் இதுதான். என் தந்தையின் நிலையும் இதுதான்.

எங்கள் ஊரில் சிலர் தங்களைப் “பக்தர்” எனக் கருதி இறுமாப்புக் கொண்டிருந்தனர். இவர்களைப் “பக்திமான்கள்” என நான் கூறமாட்டேன். சான்றோர் அருளிய நன்னெறி உபதேசங்களை அறியாதவர்கள் அல்லது அதில் நம்பிக்கை இல்லாதவர்கள் என்றுதான் கூறுவேன். இவர்கள் தீயொழுக்கத்தில் சென்று, தகாத சொற்களைப் பேசுவதையும்

தகாத செயல்களைச் செய்வதையும் பல தடவை நான் பார்த்திருக்கிறேன்; பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நடத்தையில் ஒழுக்கம் இல்லாதவர்கள் என்றுதான் இவர்களைக் கூறவேண்டும்.

ஆலயம் சென்று இறைவனைத் தியானிப்பதனாலும் சடங்கு சம்பிரதாயங்களைச் செய்வதனாலும் துதிபாடி பஜனை செய்வதனாலும் தங்களைப் “பக்தர்” எனக் கருதி இறுமாப்புக் கொண்டிருந்தார்களே தவிர, உள்ளத்தில் இவர்களுக்கு மெய்யான பக்தி இல்லை என்பதுதான் உண்மை. இவர்களுடைய செருக்கையும் சினத்தையும் சிறுமைக் குணத்தையும் சுய நலத்தையும் இப்போது எண்ணும்போது உள்ளத்தில் வேதனை எழுகிறது.

இவர்கள் தங்களைப் “பக்தர்” எனக் கருதி இறுமாப்புக் கொண்டிருந்த போதிலும் உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் தீய கதிக்குப் போவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. இவர்களின் பொய்யான பக்தி இவர்களைத் தீய கதியிலிருந்து காக்கப் போவதில்லை. தங்களின் தர்ம உபதேசத்தைக் கேட்டதால் இப்போது இவை யாவற்றையும் என்னால் உணரமுடிகிறது.

"ஜாதகத்திலும்" "தீட்டுக் கழிப்பதிலும்” “தோஷம் கழிப்பதிலும்” “ஹோமம் வளர்த்து, கிரியைகள் செய்து, மந்திரங்கள் ஓதி பாவங்களைக் கழுவுவதிலும்” என் பெற்றோர் மிகவும் நம்பிக்கை கொண்டிருந்தனர். எங்கள் ஊருக்கு வந்த "மதகுருக்கள்" இதைத்தான் அவர்களுக்குக் கற்றுக்

கொடுத்தார்கள். என் பெற்றோரும் இதையே "பக்தி" எனக்கொண்டு கடைப்பிடித்து வந்தார்கள்.

“நன்னெறிகளைக் கடைப்பிடியுங்கள்; நல்லொழுக்கங்களைக் கடைப்பிடியுங்கள்; நற்கருமங்களைச் செய்யுங்கள். செய்த பாவங்களுக்காக உள்ளம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கோருங்கள். மீண்டு மீண்டும் தீயொழுக்கத்தில் சென்று பாவ கருமங்களைச் செய்யாமல் கவனமாய் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் பாவங்களைக் கழுவும். இதைக் கடைப்பிடித்தீர்கள் என்றால், தூய்மையடைந்து நற்கதிக்குப் போவீர்கள்,” என்று அவர்கள் என் பெற்றோருக்கு உபதேசம் செய்யவில்லை. பாவங்களைக் கழுவி, நல்ல கதிக்குப் போகும் வழியை அவர்கள் என் பெற்றோருக்குக் காட்டவில்லை. ஆலயமும் இதைச் செய்யவில்லை.

ஒரு சமயம் என் தந்தை சில வாரங்கள் வேலையின்றி இருந்தார். பொருளைக் களவாடினார் என்ற குற்றத்திற்காக அவரை வேலையிலிருந்து நிறுத்திவிட்டார்கள். களவாடியதால்தான் வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்பதை என் தாயார் ஏற்றுக் கொள்ளவில்லை. விரோதிகள் செய்வினை செய்ததால்தான் தன் கணவர் வேலையை இழந்துவிட்டார் என என் தாயார் நம்பினார்.

அச்சமயம் வெளியூரில் இருந்து ஒரு “சாமியார்” எங்கள் ஊருக்கு வந்திருந்தார். சில நாள்கள் அவர் எங்கள் ஊரில் தங்கியிருந்தார். பலர் அவரைப் போய்ப்பார்த்து

தங்களின் துன்பங்களுக்குப் பரிகாரம் தேடினார்கள். என் தாயார் அனாதைப் பெண்ணுக்குச் சாப்பாடு கொடுத்து வருவதை சாமியார் எப்படியோ தெரிந்து வைத்துக் கொண்டார்.

விரோதிகள் செய்வினை செய்ததால்தான் தம் கணவர் வேலையை இழந்துவிட்டார் என நம்பிய என் தாயார் 'சாமியாரின்' உதவியை நாடினார். அவரும் எங்கள் வீட்டிற்கு வந்து, மந்திரங்களை ஓதி, சடங்குகளைச் செய்தார். பிறகு என் தாயாரிடம்,

“உங்கள் வீட்டில் “தரித்திரம்" வந்து குடி புகுந்திருக்கிறது. நீங்கள் தரித்திரம் பிடித்த வீட்டிற்குப் போய் இருக்கிறீர்கள். அந்த வீட்டுத் தரித்திரம் உங்கள் பின்னாலேயே வந்து உங்கள் வீட்டில் புகுந்து கொண்டது. இப்போது நான் அந்தத் “தரித்திரத்தைப்” பழைய வீட்டிற்கே துரத்திவிட்டேன். இந்தத் தகட்டை உங்கள் வீட்டு வாசலில் அடித்துவிடுங்கள். இனிமேல் உங்கள் வீட்டிற்குள் அந்தத் தரித்திரம்' நுழைய முடியாது," எனக் கூறி ஒரு தகட்டை என் தாயாரிடம் கொடுத்துவிட்டு, பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்.

நான் அந்த அனாதைப் பெண்ணுக்குச் சாப்பாட்டைக் கொண்டு கொடுத்த போது, அவள் வீட்டுத் 'தரித்திரம்' தான் என் பின்னால் வந்து, எங்கள் வீட்டினுள் நுழைந்து விட்டது என என் தாயார் நம்பினார். அன்று முதல் அந்த அனாதைப் பெண்ணுக்குச் சாப்பாடு கொடுப்பதை என் தாயார் நிறுத்திவிட்டார்.

"அந்தப் பாட்டி வீட்டில் பேய் இருக்கிறது. இனிமேல் அந்தப் பேய் உன்னைப் பிடித்துக் கொள்ளும்," என்று என் தாய் நீ அங்குப் போகக் கூடாது. நீ அங்குப் போனாயென்றால், என்னிடம் கூறி, என்னையும் பயமுறுத்திவிட்டார். நான் அன்றுமுதல் அந்தப் பாட்டியின் வீட்டிற்குச் செல்வதில்லை.

ஒரு மடையனின் பேச்சை நம்பி, தான் செய்து வந்த ஒரு நற்செயலையும் என் தாயார் நிறுத்திவிட்டார். இப்படிப்பட்டதுதான் என் தாயாரின் பக்தி. என் தந்தையின் பக்தியும் இப்படிப்பட்டதுதான். அவர்களைத்தான் நானும் பின்பற்றினேன். அவர்களைப் பின் பற்றின என் பக்தி எவ்வாறு இருக்கும் என்பதைத் தாங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

எங்கள் வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் இன்னும் ஒரு கோவில் இருந்தது. அங்கு ஆண்டுக்கு ஒரு முறை ஆடுகளைப் பலி கொடுத்து திருவிழா கொண்டாடுவார்கள். என் தந்தையும் அந்தக் கோவிலுக்குப் போவார். ஒவ்வோர் ஆண்டும் 'காவடி' எடுப்பார்.

பெரியவன் ஆனதும் நானும் அந்தக் கோவிலுக்குப் போனேன். சில சமயங்களில் நானும் காவடி எடுப்பேன். அங்கும் சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்கள் போதனை செய்யப்படவில்லை.

தர்ம உபதேசங்களைக் கேட்டறியாத என் தந்தை, தவறான போதனைகளை நம்பி, பாவமில்லாத இடத்தில் பாவத்தைக் கண்டார்; பாவமுள்ளவிடத்தில் பாவமின்மையைக்

கண்டார்; ஒழுக்கமில்லாதவிடத்தில் ஒழுக்கத்தைக் கண்டார்; ஒழுக்கமுள்ளவிடத்தில் ஒழுக்கமின்மையைக் கண்டார். அதன் காரணமாக தவறான கொள்கைகளைப் பின்பற்றி, தீய வழியில் சென்று தீய கதியை அடைந்தார்.

இறைவனின் நியதியை அறியாமல், இறைவன் கண்டிப்பார் என்பதை உணராமல் வாழ்ந்தார். அவருக்கு எங்கள் ஊரில் செல்வாக்கு இல்லை. முரடன், புத்தியில்லாதவன், வம்பு வளர்ப்பவன், மரியாதையில்லாதவன் என இகழப்பட்டார். நன்னெறிகளை அறியாததால், தீயொழுக்கத்தில் சென்று, பழியையும் பாவத்தையும் அடைந்தார்.

என் கதியும் இதுதான். தர்ம உபதேசங்களைக் கேட்காததால், நன்னெறிகளை அறியாமல், தீயொழுக்கத்தில் சென்று, பழியையும் பாவத்தையும் அடைந்தேன்.

என் தந்தை இறந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அவரின் முடிவு மிகவும் பயங்கரமானது.

அவர் ஒட்டிச் சென்ற லாரியின் டயர் வெடித்து, சாலையோரத்தில் இருந்த பள்ளத்தில் லாரி கவிழ்ந்துவிட்டது. அது ஒரு செங்குத்தான பள்ளம். பள்ளத்தில் உருண்டோடிய லாரி, தலைகீழாகக் கவிழ்ந்து தீப்பற்றிக் கொண்டது.

பள்ளத்தில் தலைகீழாக கவிழ்ந்து கிடந்த லாரிக்குள் என் தந்தை சிக்கிக் கொண்டார். அவரால் வெளியேற

முடியவில்லை. உதவி கோரிக் கூச்சலிட்டார். பள்ளத்தில் லாரி தீப்பிடித்து எரிவதையும் அதிலிருந்து வந்த கூக்குரலையும் கேட்ட சிலர், அவருக்கு உதவ முயன்றார்கள். ஆனால், செங்குத்தான பள்ளத்தில் அவர்களால் இறங்கி செல்ல முடியவில்லை. சிறிது நேரத்தில் லாரி முழுதும் தீப்பற்றிக் கொண்டது. என் தந்தையின் கூக்குரலும் நின்றுவிட்டது.

தீயணைக்கும் படையினர் வந்து அவருடைய கருகிப் போன உடலை லாரியிலிருந்து அப்புறப்படுத்தி, மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றார்கள். கருகிப்போன அவருடைய சடலத்தை மருத்துவ மனையிலிருந்து பெற்றுச் சென்று, ஈமச் சடங்குகளைச் செய்து, இடுகாட்டில் அடக்கம் செய்தோம்.

என் தாயார் என்னைக் காண வருவதுண்டு. என் கதியை எண்ணிப் பாசத்தால் கண்ணீர் சிந்துகிறார். தாம் செய்த பாவங்கள் பழுத்துத் துன்பம் தரத் தொடங்கிவிட்டன என்பதை அவர் இன்னும் உணரவில்லை. இதை உணராத அவர், எங்கெங்கோ ஓடி, யார் யாரிடமோ உதவி கேட்கிறார்.

நல்லொழுக்கங்களையும் நற்குணங்களையும் நற்பண்புகளையும் கற்றுக் கொடுத்து, நல்ல பிள்ளையாக என்னை வளர்த்து இருந்தாரென்றால், அவருக்கு ஏன் இந்தத் துன்பம்? இப்போது அவர் அழுது புலம்பி என்ன பயன்!

நான் தீயொழுக்கத்தில் சென்ற போது, என்னைக் கண்டித்து, நல்ல அறிவுரைகளைக் கூறி, என்னை நல்வழியில்

செலுத்த வேண்டியது அவரின் கடமையே என்ற போதிலும், இதை அவர் செய்யவில்லை. இதை அவர் செய்யத் தவறிவிட்டதால், நானும் கெட்டேன், அவரும் கெட்டார்.

என் வாழ்வு கெட்டபின், பாசத்தால் அவர் விடும் கண்ணீர் எனக்குப் பயன் தராது.

## *2.5 வளர்ப்பும் கூடா நட்பும்.*

என் தந்தை தாம் நிறையச் சம்பாதிக்கிறோம் என்ற செருக்கில், தம்மை மிகவும் கெட்டிக்காரர் எனக்கருதி, தன் மடைமையை உணராமல், பிறரை மதியாது வாழ்ந்தார்.

இவர் தம் நடத்தையில் ஒழுக்கம் இல்லாதவர். ஆணவமும் அகந்தையும் மிகுந்தவர்; கோபக்காரர்; வம்புக்காரர்; நீதி நியாயத்திற்குக் கட்டுப்படாதவர்; உள்ளத்தில் பகை பாராட்டி வஞ்சம் தீர்ப்பவர். நன்னெறிகளை அலட்சியம் செய்து, பழிபாவத்திற்கு அஞ்சாமல் குற்றச் செயல்களைச் செய்பவர்; சினமும் செருக்கும் சிறுமைக் குணமும் இவரை இழிவானவராக்கின.

என் தாயார் உள்ளத்தில் குரோதம் நிறைந்தவர். பகை பாராட்டும் உள்ளம் கொண்டவர். சிடு சிடுவென முகத்தில்

வெறுப்பைக் காட்டுவார். வெறுப்பினாலும் பகையினாலும் சினத்தினாலும் பிறருக்குத் தீங்கு செய்வார்.

“மடமை எனப்படுவது, தனக்குத் தீமை தருவனவற்றைக் கைக்கொண்டு, நன்மை பயக்கக் கூடியவற்றைக் கைவிடுவதாகும். அறிவில்லாதவர்கள் தாங்களே தங்களுக்குக் கொடிய துன்பங்களைச் செய்து கொள்வார்கள்.அப்படிப்பட்ட துன்பங்களை இவர்களுடைய பகைவர்கள்கூட இவர்களுக்குச் செய்துவிட முடியாது," எனத் தாங்கள் கூறினீர்கள். இது என் பெற்றோர் இருவருக்குமே பொருந்தும். அவர்களின் பராமரிப்பில் வளர்ந்த எனக்கும் இது பொருந்தும்.

என் பெற்றோர் இருவருமே உள்ளத்தில் அருள் இல்லாதவர்கள் என்பதுதான் உண்மை. நானும் உள்ளத்தில் அருள் இல்லாமலேயே வளர்ந்தேன்.

என் தாயும் தந்தையும் எனக்குப் பெற்றோர் மட்டும் அல்ல. அவர்கள்தாம் என் முதல் "குரு". "தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை" என்பது போல், என் பெற்றோரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை, வாழ்நாள் முழுதும் என்னைவிட்டு விலகவில்லை.

அந்த வேடனிடம் வளர்ந்த கிளி கொடிய சொற்களைக் கற்றுக் கொண்டதுபோல, என் பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்த நான், அடங்காமையையும் அகங்காரத்தையும் தவறான கொள்கைகளையும் ஒழுக்கக் கேட்டையும் தீய குணங்களையும் கற்றுக் கொண்டேன்.

உண்பதிலும் உடுத்துவதிலும் என் பெற்றோர் எனக்குக் குறை வைக்கவில்லை. உண்பதுவும் உடுப்பதுவும் மட்டும் மானிட வாழ்வு அல்லவே! குணமும் கொள்கைகளும் அன்றோ ஒருவனின் வாழ்வை நிர்ணயிக்கும். இதை என் பெற்றோர் உணர்ந்திருக்கவில்லை. தங்களுடைய தர்ம உபதேசங்களைக் கேட்பின்தான் நானும் இவற்றை உணர்கிறேன்.

என் பெற்றோரின் உள்ளத்தில் அருள் இல்லாததால், பொருள் இருந்தும் எங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் இல்லாமல் போயிற்று. எப்போதும் சண்டை சச்சரவுதான். சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் என் தந்தை தாயாரிடம் சினத்தைக் காட்டுவார். கடுஞ்சொற்களால் திட்டுவார். சில சமயங்களில் ஆத்திரத்தில் அறிவிழந்து என் தாயாரை அடிப்பார். அச்சமயத்தில் நானும் என் தங்கையும் அச்சத்தால் நடுங்குவோம்.

சில சமயங்களில் என் தந்தை தம் நண்பர்களுடன் மது அருந்திவிட்டு, போதையுடன் வீட்டிற்கு வருவார். மது அருந்திய மயக்கத்தில் வீண் சண்டை சச்சரவுகளைச் செய்வார். அநாகரிகமாக நடந்து கொள்வார். நானும் என் தங்கையும் அச்சத்தால் அறையின் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொள்வோம்.

என் தாயார் தம் கோபத்தைப் பிள்ளைகளிடம் காட்டுவார். நானும் என் தங்கையும் கடுஞ்சொற்களுக்கும் திட்டலுக்கும் தண்டனைக்கும் அஞ்சி, அன்பிற்காக ஏங்கினோம்.

என் தந்தை என்னிடம் எப்போதும் ஆணையிட்டு அதிகார தோரணையில்தான் பேசுவார். என்னிடம் அவர் அன்பு காட்டுவதில்லை. அன்புடன் பேசுவதுமில்லை. அறியாமல் நான் தவறு செய்தாலும் அறிந்து வேண்டுமென்றே செய்துவிட்டதுபோல் என்னைத் திட்டுவார். என் தவற்றைச் சுட்டிக் காட்டி, ஏன் அது தவறு என்ற காரணத்தை விளக்கி, நல்ல அறிவுரைகளைக் கூறுவதில்லை. நல்லனவற்றை அறிவுறுத்தி, நல்லனவற்றைச் செய்வதற்கு ஊக்கமளிக்கவில்லை.

என் தாயாரும் இப்படித்தான். அறியாமல் செய்த தவறுகளை அறிந்து செய்ததாகக் கொண்டு திட்டுவார். சில சமயங்களில் அடித்துத் தண்டிப்பார்.

என்னிடம் நியாயம் இருந்தாலும் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தித், தாம் சொல்வதே சரி எனச் சாதிப்பார். நான் நியாயத்தை எடுத்துச் சொன்னாலும் அதை அலட்சியப் படுத்துவார்.

ஒருவேளை என் பெற்றோரின் உள்ளத்தில் அன்பு இருந்திருக்கலாம். தம் உள்ளத்தில் இருந்த அன்பைத் தம் பிள்ளைகளிடம் காட்டவில்லை. அன்பான சொற்களைப் பேசி, எங்களுடன் கூடிக் குலாவி, சிரித்து மகிழ்ந்து உறவாடவில்லை. ஒரு வேளை, உள்ளத்தில் உள்ள அன்பைப் பிள்ளைகளிடம் காண்பித்தால் பிள்ளைகள் கெட்டுவிடுவார்கள் என்ற தவறான கொள்கையை என் பெற்றோர் கடைப் பிடித்திருக்கலாம்.

அன்பான அனுசரணையில்லாமல், கடுஞ்சொற்களைக் கேட்டு, திட்டலுக்கும் தண்டனைக்கும் அஞ்சி வளர்ந்தேன். நல்லனவற்றை அறிவுறுத்தி, நல்லனவற்றைச் செய்வதற்கு ஊக்கமளிக்கத் தவறிவிட்ட பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்தேன். தங்களின் ஒழுக்கக் கேட்டை உணராது வாழ்ந்த பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்தேன். உள்ளத்தில் அருள் இல்லாத பெற்றோரின் பராமரிப்பில் நான் வளர்ந்தேன். அப்படியிருக்கும்போது, என் குணமும் கொள்கைகளும் எவ்வாறாக இருக்கும்?

கடுஞ்சொற்களைப் பேசக் கற்றுக் கொண்டேன்; கொஞ்சமும் நாணாமல் பொய் பேசக் கற்றுக் கொண்டேன்; சண்டை சச்சரவுகள் செய்யக் கற்றுக் கொண்டேன்; வம்பு வளர்க்கக் கற்றுக் கொண்டேன். கடுஞ்சொற்களைப் பேசி, மிரட்டிப் பயமுறுத்தி பலாத்காரத்தால் என் காரியத்தைச் சாதிப்பதை வல்லமை எனக் கற்றுக்கொண்டேன். என்னிடம் நியாயம் இல்லாத போதிலும், அது நியாயமானதே எனச் சாதிக்கக் கற்றுக் கொண்டேன். என் குற்றங்களைக் கண்டித்து நல்ல அறிவுரை கூறுவோரை வெறுக்கக் கற்றுக் கொண்டேன்.

நல்லனவற்றை அறிவுறுத்தி, நல்லனவற்றைச் செய்வதற்குப் பெற்றோரும் ஊக்கமளிக்கவில்லை; ஆலயமும் ஊக்கமளிக்கவில்லை; என்னுடன் கூடிப் பழகினோரும் ஊக்கமளிக்கவில்லை. நன்னெறிகளையும் நல்ல பண்புகளையும் நல்ல குணங்களையும் அறியாது வளர்ந்தேன். பெரியோரை மதியாது வளர்ந்தேன். உள்ளத்தில் அருள்

இல்லாது வளர்ந்தேன். இவைதாம் என் வாழ்வு கெட்டழிந்ததற்கான காரணங்கள் என்பதை இப்போது நான் உணருகிறேன்.

பள்ளியில் பிள்ளைகளிடம் வம்பு வளர்ப்பேன்; சண்டை சச்சரவுகள் செய்வேன்; சண்டையிடுவேன். மிரட்டிப் பயமுறுத்திப் பணம் பறிப்பேன்; பொருள்களைப் பறிப்பேன். பெற்றோரிடமோ, ஆசிரியரிடமோ கூறினால் தண்டிப்பேன் என எச்சரித்துப் பயமுறுத்துவேன்.

வறுமையினாலோ, இல்லாத குறையாலோ நான் இவ்வாறு நடந்து கொண்டதாகக் கூற முடியாது. என் தந்தை போதுமான அளவு எனக்குப் பணம் கொடுத்தார். கல்வி சம்பந்தமாக நான் கேட்டதை எல்லாம் வாங்கித் தருவார். ஆனால், மற்றப் பிள்ளைகளை மிரட்டிப் பயமுறுத்தி அக்கிரமம் செய்வதில் இன்பத்தைக் கண்டேன்.

பள்ளியில் ஆசிரியர் கற்றுக் கொடுப்பதைக் கவனமாகக் கேட்பதில்லை. கருத்துடன் கற்பதில்லை. வீட்டிலும் கல்வி கற்பதில் பெற்றோர் எனக்கு ஊக்கமளிக்கவில்லை. என்னைக் கற்கும்படி வற்புறுத்துவதும் இல்லை.

பள்ளியில் ஆசிரியர் கற்றுக் கொடுத்ததை வீட்டில் பயில வேண்டும் என்பதை என் தாயார் எனக்கு அறிவுறுத்தி, வலியுறுத்தி ஊக்கமளிக்கவில்லை. வீட்டில் நான் கற்பதே இல்லை எனக் கூறலாம். விளையாட்டு, கேளிக்கை, வம்பு வளர்த்தல், சண்டை சச்சரவு செய்தல், அக்கிரமம் செய்தல்

இவைதாம் எனக்கு இன்பமாய்த் தோன்றின.

எப்படியோ ஆறு ஆண்டுகள் பள்ளிக்குச் சென்றேன். ஆறு ஆண்டுகள் பள்ளியில் அக்கிரமம் செய்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் துன்பத்தைக் கொடுத்தேனே தவிர, கல்வி கற்றதாகக் கூற முடியாது. அக்கிரமம் செய்வதில் எனக்கிருந்த ஆர்வம் கற்பதில் இருந்ததில்லை.

பிறகு பள்ளி செல்வதையும் நிறுத்திவிட்டேன். இதை அறிந்த என் தந்தை ஆரம்பத்தில் என்னைக் கண்டித்தார். பிறகு அடித்தார். அவர் காலையில் வேலைக்குச் சென்றாரென்றால் இரவில்தான் வீட்டிற்கு வருவார். சில நாள்கள் வீட்டிற்கும் வரமாட்டார். நான் கல்வி கற்றுச் சிறந்த மாணவனாக விளங்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால், கல்வி கற்பதற்குப் பொருத்தமான சூழ்நிலையை வீட்டில் அமைக்கத் தவறிவிட்டார்.

என் தந்தைக்குப் பயந்து இரவில் நான் வீட்டில் தங்குவதில்லை. வேறு எங்காவது தங்குவேன். என் தாயார் "அவனுக்குப் படிப்பு வரவில்லை" எனக்கூறி என் தந்தையைச் சமாதானப் படுத்தினார். நாளடைவில் அவரும் அக்கூற்றை ஏற்றுக் கொண்டார். “அவனுக்குப் படிப்பு வரவில்லை” என என் தாயார் பிறரிடம் கூறிக் கொள்வார்.

அதன் பின் இங்கும் அங்குமாகச் சிலவிடங்களில் வேலை செய்தேன். இனம் இனத்தோடு சேரும் என்பது போல்,

என்னைப் போல் அக்கிரமம் செய்வாரோடு கூடிப் பழகினேன். புகை பிடிப்பது, மது அருந்துவது, இரகசியமாக பார்ப்பது, சூதாடுவது போன்ற தீயொழுக்கங்களில் சுகத்தை நாடினேன்.

சதிக்கூட்டத்தில் சேர்ந்து, மிரட்டிப் பயமுறுத்தி பணம் வசூலிப்பது; அடிதடி சண்டைகள் செய்வது; வன் செயல்களைச் செய்வது; கொள்ளையிடுவது; பெண்களைக் கடத்திச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது; போதைப் பொருள் விநியோகிப்பது போன்ற பாவ கருமங்களைச் செய்து, படிப்படியாக மனசாட்சி இல்லாத மூர்க்கனாக மாறிவிட்டேன்.

“தீமை பயக்கும் தீவினைகளைச் செய்தல் எளிது; நன்மை பயக்கும் நல்வினைகளைச் செய்தலே மிகவும் சிரமமாகும்," எனத் தாங்கள் கூறினீர்கள். மனசாட்சி இல்லாத மூர்க்கனாக மாறிவிட்ட எனக்கு, தீய வழியில் , நீதி நியாயங்களைப் புறக்கணித்து , பிறரை வருத்தி, பிறருக்குத் துன்பம் செய்து பொருளும் இன்பமும் தேடுவது எளிதாகவும் கவர்ச்சியாகவும் தோன்றியது.

"வெட்கமின்றிக் காகம்போல் துணிவுடையவனுக்கும் வம்பு வளர்ப்பவனுக்கும் புறங்கூறுவோனுக்கும் முரடனுக்கும் தூர்த்தனுக்கும் வாழ்க்கை எளிதாகவே இருக்கிறது," எனத் தாங்கள் கூறினீர்கள். மனசாட்சியில்லாத மூர்க்கனாக மாறிவிட்ட எனக்கு வாழ்க்கை எளிதாகவே இருந்தது.

பாவம் இன்பமாய்த் தோன்றியது; தேன் போல் இனித்தது;

அதில் களிப்புற்றேன். ஒரு பாவத்திலிருந்து மற்றொரு பாவத்திறகுத் தாவினேன். நான் செய்யாத பாவம் எதுவுமேயில்லை எனக் கூறலாம். அப்படிப்பட்ட மனசாட்சியற்ற துஷ்டனாக நான் மாறிவிட்டேன்.

இறுதியாகக் கொலையும் செய்தேன். இது தொடர்பான எல்லா விபரங்களையும் தாங்கள் அறிவீர்கள்.

"பாவம் பழுத்துப் பயனளிக்காத வரையில் மூடன் அதைத் தேன் என்று விரும்புகிறான்; ஆனால் அது பழுத்துப் பயனளிக்கையில் அவன் ஆறாத் துயரை அடைகிறான்," எனத் தாங்கள் கூறினீர்கள். என் பாவம் பழுத்துப் பயனளிக்க ஆரம்பித்துவிட்டதால் ஆறாத் துயரம் என்னைப் பற்றிக் கொண்டது.

"மூடன் பாவமான கருமங்களை அதன் துன்பப் பயனை அறியாமல் செய்கிறான். தீயினால் எரிக்கப்படுவது போல், மடையன் தன் பாவ கருமங்களாலேயே வேகிறான்," எனக் கூறினீர்கள். நான் செய்த பாவங்கள் தீயினும் கொடியதாக இப்போது என்னை எரிக்கின்றன. முன்பு பாவம் இன்பமாய்த் தோன்றிய போது, நான் என் மடமையை உணரவில்லை. தீயினும் கொடியதாக எரிக்கும் இந்நேரத்தில் என் மடமையை எண்ணி எண்ணிப் புலம்புகிறேன்.

"ஒருவன் தானாகவே பாவம் செய்கிறான்; தனக்குத் தானே கேட்டைத் தேடிக் கொள்கிறான்."

"மூடனுடைய பாவம் அவனிடமே பிறந்தது. அவனே படைத்தது. வைரம் மற்ற மணிகளை அறுப்பது போல், அவன் செய்த பாவமே அவனை அழித்துவிடும்," எனத் தாங்கள் கூறினீர்கள். இது எவ்வளவு உண்மை என்பதை இப்போது நான் உணருகிறேன். நான் செய்த பாவமே என்னை அழித்துவிட்டது.

தீயொழுக்கத்தை மேற்கொண்டு, கருத்தில்லாமல் அசட்டையாக வாழ்ந்த பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்தேன். சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களைக் கேளாததால், ஆலயம் போயும், இறைவனை மறந்து, உள்ளத்தில் அருள் இல்லாது வாழ்ந்த பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்தேன்.

என் குற்றங்களைக் கண்டிக்கவும் குற்றங்களிலிருந்து என்னை மீட்கவும் தீய வழிகளில் செல்லாமல் என்னைத் தடுக்கவும் நல்லனவற்றை எனக்கு அறிவுறுத்தவும் நல்லனவற்றைச் செய்வதற்கு எனக்கு ஊக்கமளிக்கவும் தவறிவிட்டனர் என் பெற்றோர்கள்.

அதன் காரணமாக, நன்னெறிகளையும் நல்ல பண்புகளையும் நல்ல குணங்களையும் அறியாமல் வளர்ந்தேன். ஆலயம் போயும் இறைவனை மறந்து வளர்ந்தேன். உள்ளத்தில் அருள் இல்லாது வளர்ந்தேன்.

உள்ளத்தில் அருள் இல்லாது வளர்ந்த எனக்கு, தீயொழுக்கம் இன்பமாய்த் தோன்றியது; கூடா நட்பு தேன்

போல் இனித்தது. பாவ கருமங்களைச் செய்து பாவியானேன். நான் செய்த பாவமே என்னை அழித்துவிட்டது.

தன் வாழ்வு கெட்டதற்கான காரணங்களை அந்த இளைஞன் இவ்வாறு விளக்கினான். வளர்ப்பினாலும் கூடா நட்பினாலும் தான் கெட்டதாகச் சமூகப் பணியாளரிடம் அவன் விளக்கிக் கூறினான்.

(குறிப்பு: இந்த இளைஞன் வாழ்ந்த ஊருக்கு ஒரு நகை வியாபாரி வருவதுண்டு. அவர் பலவகை நகைகளைக் கொண்டு வருவார்; வீடு வீடாகச் சென்று விற்பனை செய்து, தவனை முறையில் பணம் வசூலிப்பார்; வாடிக்கையாளரின் குறிப்புகளுக்கேற்ப நகைகளைச் செய்தும் கொடுப்பார்.

இந்த இளைஞனும் இவனுடைய நண்பனும் அந்த வியாபாரியை அவரது மோட்டார் வண்டியோடு கடத்திச் சென்று, பணத்தையும் நகைகளையும் பறித்துக் கொண்டு, அவரை அடித்து வண்டிக்குள் போட்டு, வண்டியைத் தீ வைத்து வண்டியோடு அவரை எரித்துக் கொன்றுவிட்டார்கள்.)

## *3. அறம் செய்வோரை அறம் காக்கும்.*

"தர்மம் தலை காக்கும்" என நம் பெரியோர் கூறியுள்ளனர். அதாவது, நன்னெறிகளைக் கடைப்பிடித்து, நீதி, நேர்மை பிசகாமல், நற்குணத்துடனும் நற்பண்புகளுடனும் வாழ்வோர் தண்டனைக்கு உள்ளாவதில்லை. இது அறம் செய்வோருக்கு அறம் அளிக்கும் வரம். அதனால்தான் ஔவையார் “அறம் செய விரும்பு” எனக் கூறியுள்ளார்.

அறத்தை விளக்குவதற்காகப் பகவான் புத்தர் தம்முடைய முற்பிறப்பின் கதை ஒன்றைக் கூறியுள்ளார்.

ஒரு காலத்தில் காசி இராஜ்யத்தில் ஒரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தில் தர்ம பாலன் எனபவர் வாழ்ந்து வந்தார். அவர் தம் பெயருக்கு ஏற்றவாறு தர்ம சீலராகவே வாழ்ந்து வந்தார். அவர் அறத்தைப் போற்றிக் காத்து, நல்லொழுக்கத்தில் சென்று, அறம் தவறாமல் வாழ்ந்து வந்தார். இவரைப் போலவே இவருடைய மனைவி, பிள்ளைகளும் அறத்தைப் போற்றி வாழ்ந்து வந்தார்கள். இவரைப் போலவே இவருடைய வேலையாள்களும் நல்லொழுக்கத்தில் சென்று, நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட்டு, தம் எஜமானுக்குச் சேவை செய்து வந்தனர். இவரது அறத்தையும் நற்குணங்களையும் கண்ட மக்கள் , அக்கிராமத்தை “ தர்ம பால கிராமம் “ எனப் பெயரிட்டு அழைத்தனர்.

அப்போது போதிசத்துவர் அந்தக் குடும்பத்தில் பிறந்தார். குழந்தைக்குத் தர்ம பால குமாரன் என்று பெயரிட்டனர். பையனுக்கு வயது வந்ததும் அவனுடைய தந்தை அவனைத் தட்ச சீலத்தில் கல்வி கற்க அனுப்பி வைத்தார். அங்குள்ள ஒரு குருவினிடம் மற்ற மாணவர்களோடு தர்ம பால குமாரனும் கல்வி கற்று வந்தான்.

அச்சமயம், குருவின் மூத்த மகன், இளமைப் பருவத்திலேயே இறந்துவிட்டான். மகனை இழந்து விட்ட துக்கத்தில், குரு கண்ணீர் விட்டு அழுது புலம்பினார். பிறகு, உறவினர்களுடனும் தம் மாணவர்களுடனும் இறந்த மகனின் சடலத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று ஈமச்சடங்குகளைச் செய்தார். அப்போது, "மகனே, இளம் வயதிலேயே என்னை விட்டுப் பிரிந்து விட்டாயே!" என அழுது புலம்பினார்.

இவரது துக்கத்தைக் கண்ட உறவினர்களும் மாணவர்களும் கண்ணீர் சிந்தி அழுதார்கள். அங்குக் கூடியிருந்தவர்களில் தர்ம பால குமாரன் ஒருவன் மட்டுமே, கண்ணீர் சிந்தி அழவில்லை. பிறகு, எல்லாரும் குருவின் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தனர்.

மாணவர்கள் அனைவரும் குருவின் மைந்தன் இறந்துவிட்டதைக் குறித்து வருந்தி வேதனையுடன் பேசிக்கொண்டிருந்தனர். "நல்ல பையன். இளம் வயதிலேயே வாழ்க்கை துண்டிக்கப்பட்டு, தாய் தந்தையிடமிருந்து பிரிந்துவிட்டான்," என மற்ற மாணவர்கள் யாவரும்

வருத்தப்பட்டு உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

"நீங்கள் கூறுவது போல், அவனுக்கு இளம் வயதுதான். இளம் வயதிலேயே ஏன் அவன் இறந்தான்? இளம் வயதில் இறப்பது சரியல்லவே!" எனத் தர்ம பால குமாரன் மற்ற மாணவர்களைப் பார்த்துக் கேட்டான்.

அதற்கு அவர்கள் "இளம் வயதினரும் மரணத்திற்கு உட்பட்டவர்களே என்பது உனக்குத் தெரியாதா?" என்றார்கள்.

“இதை நான் அறிவேன். மூப்படைந்து இறப்பதுதான் முறை," எனத் தர்ம பால குமாரன் கூறினான்.

"ஓ. தங்கள் குடும்பத்தில் இதுதான் வழக்கமா?"

“ஆம், எங்கள் குடும்பத்தில் இதுதான் வழக்கம்.”

மற்ற மாணவர்கள் குருவிடம் சென்று இதைக் கூறினர். குரு தர்ம பால குமாரனை அழைத்து, “மகனே, உங்கள் குடும்பத்தில் இளமையில் எவரும் இறப்பதில்லை என்பது உண்மைதானா?" எனக் கேட்டார்.

"ஆம் குருவே! எங்கள் குடும்பத்தில் ஏழு தலைமுறைகளாக இளம் வயதில் எவரும் இறந்ததில்லை. அனைவருமே முதுமையில்தான் இறந்துள்ளனர்,” எனத் தர்ம பால குமாரன் கூறினான்.

இதைக் கேட்ட குரு, "இவன் சொல்வது மிகவும் அதிசயமாக இருக்கின்றதே! இவன் தந்தையிடம் போய்க் கேட்போம். உண்மையாக இருக்குமாயின், அவர்களின் தர்மங்களை நாமும் கடைப்படிப்போம்," எனத் தீர்மானித்தார்.

சில நாள்கள் கழித்து, தர்ம பால குமாரனின் தந்தையைக் காண்பதற்காகப் பயணத்தை மேற்கொண்டார். அப்போது அவர் ஒரு பையில் சில ஆட்டு எலும்புகளை எடுத்துச் சென்றார். கிராமத்தை அடைந்ததும் அங்குள்ளோரிடம் விசாரித்து, தர்ம பாலரின் வீட்டு வாசலில் வந்து நின்றார்.

வேலைக்காரர்களிடம், தர்ம பால குமாரனின் குரு வந்திருப்பதாக அறிவிக்கும்படி கேட்டுக் கொண்டார். அவர்களும் அவ்வாரே தம் எஜமானரிடம் சென்று அறிவித்தார்கள்.

அவரும் விரைந்து வந்து மிக்க மரியாதையுடன் குருவை வரவேற்று, வீட்டிற்குள் அழைத்துச் சென்று அன்புடன் உபசரித்தார்.

பேச்சு வாக்கில் குரு கூறினார், “தங்கள் மகன் ஒரு சிறந்த மாணவன். கருத்துடன் வேதங்களைக் கற்றான். துரதிருஷ்டவசமாக தங்கள் பையன் திடீரென்று இறந்துவிட்டான். இந்தத் துக்கச் செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்து ஆறுதல் கூறவே இப்பிரயாணத்தை மேற்கொண்டு இங்கு வந்தேன்."

தர்ம பாலர் அழுது புலம்புவார் என்றுதான் குரு எதிர் பார்த்தார். ஆனால், தர்ம பாலரோ, புன்னகை செய்தவாறு, "இறந்தவன் என் மகன் அல்ல. தாங்கள் வேறு யாரையோ என் மகன் என்று தவறுதலாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்," என்று கூறினார்.

அதற்குக் குரு "இறந்தவன் தங்கள் மகன்தான், வேறு யாருமில்லை. இதோ இந்த எலும்புகளைப் பாருங்கள்," என்று தாம் கொண்டு வந்த எலும்புகளைக் காட்டி, "இவை தங்கள் மகனின் எலும்புகள்தாம்," எனக் கூறினார்.

"இவை நிச்சயமாக என் மகனின் எலும்புகள் அல்ல. ஏனெனில் நிச்சயமாக என் மகன் இறந்திருக்க முடியாது. எங்கள் குடும்பத்தில் , ஏழு தலைமுறைகளாக யாரும் இளவயதில் இறந்தது கிடையாது," எனத் தர்ம பாலர் கூறினார்.

இதைக் கேட்ட குரு மிகவும் ஆச்சரியப்பட்டவராய், "இப்படி ஒரு வழக்கம் தங்கள் குடும்பத்தில் உண்டென்றால், அதற்குக் காரணம் இருந்தாக வேண்டும். காரணமில்லாமல் இது போன்ற அதிசயங்கள் நடப்பதில்லை. எதனால் தங்கள் குடும்பத்தில் இளமையில் எவரும் இறப்பதில்லை?" என்று கேட்டார்.

தம் குடும்பத்தில் எதனால் எவரும் இளமையில் இறப்பதில்லை என்பதற்கான காரணங்களைத் தர்ம பாலர் இவ்வாறு விவரித்தார்:

நாங்கள் நன்னெறிகளைக் கடைப்பிடிக்கிறோம், பொய் சொல்வது கிடையாது; ஒழுக்கக் கேடுகளையும் பாவங்களையும் விட்டு விலகி நிற்கிறோம்; தீயொழுக்கங்களில் சென்று பாவ கருமங்களைச் செய்தில்லை.

நல்லாரின் சேர்க்கையை நாங்கள் விரும்புகிறோம், தீயாரின் சேர்க்கையை நாங்கள் விரும்புவதில்லை. மடையர்களின் ஒழுக்கக் கேட்டில் நாங்கள் கவனம் செலுத்துவதில்லை. அறிவுடையோரை நாங்கள் பின்பற்றுகிறோம், மடையர்களை நாங்கள் பின்பற்றுவதில்லை.

யாருக்காவது தானம் கொடுக்கும்போது இன்சொற்கள் பேசி இன்முகத்துடன் கொடுக்கிறோம். தானம் கொடுக்க எண்ணும்போது நாங்கள் உள்ளம் மகிழ்கிறோம்; தானம் கொடுக்கும் போதும் உள்ளம் மகிழ்வோம்; தானம் கொடுத்த பின் மனம் சஞ்சலப்பட்டு நாங்கள் வருந்துவதில்லை.

பிட்சுகள், அந்தணர்கள், யாத்ரீகர்கள் இவர்களைத் திருப்திப்படுத்தி மகிழ்விக்கிறோம். பிச்சைக்காரர்கள், ஏழைகள், அனாதைகள், மற்றும் பசித்திருப்போர் இவர்களுக்கெல்லாம் மனமுவந்து அன்னம் அளிக்கிறோம்.

பிறர் மனைவி மேல் மோகம் கொண்டு நாங்கள் ஏங்குவதில்லை; எங்கள் குடும்பத்தில் கணவர் மனைவிக்குத் துரோகம் செய்வதில்லை; மனைவியும் கற்பு தவறி கணவனுக்குத் துரோகம் செய்வதில்லை; இல்லற வாழ்வில் நாங்கள் கண்ணியம் தவறுவதில்லை.

கற்புடைய மனைவிகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளைக் கல்வியிலும் நன்னெறிகளிலும் பயிற்சி அளித்து வளர்க்கிறோம், அவர்களும் கற்க வேண்டியவற்றைக் கற்று அறிய வேண்டியவற்றை அறிந்து; நிரம்பிய அறிவுடையவர்களாகத் திகழ்கிறார்கள்.

எங்களுக்குத் தெய்வலோகத்தில் நம்பிக்கை உண்டு. தெய்வலோகப் பாக்கியத்தை அடைவதற்காக, நாங்கள் ஒவ்வொருவரும் அறம் செய்ய மனம் சோர்வுறாமல், முயற்சி செய்கிறோம். எங்கள் குடும்பத்தில் தந்தை இப்படித்தான் வாழ்கிறார்; தாயும் இவ்வாறே வாழ்கிறார்; மகனும் மகளும் சகோதரனும் சகோதரியும் இப்படித்தான் வாழ்கிறார்கள். ஆகவே எங்கள் குடும்பத்தில் இளமையில் எவரும் இறப்பதில்லை.

தம் குடும்பம் கடைப்பிடிக்கும் தர்மத்தை இவ்வாறு விளக்கி, அதன் காரணமாகத் தம் குடும்பத்தில் இளமையில் எவரும் இறப்பதில்லை எனக் கூறி, இப்படி முடித்தார்:

அறத்தின் வழியில் செல்வோரை அறம் காக்கும்; அறத்தைக் கடைப்படிப்போர் சுகம் பெறுவர்; அறத்தில் நின்று அறச்செயல்களைச் செய்வோர் தண்டனைக்கு உள்ளாகித் துன்புறுவதில்லை; இது அறம் செய்வோருக்கு அறம் அளிக்கும் வரம்.

மழைகாலத்தில் பாதுகாப்பு அளிக்கும் ஒரு குடை போல, அறம் செய்வோரை அறம் காக்கும். என் பையன்

இன்னும் உயிரோடுதான் இருக்கிறான். அறம் என் மகனைக் காக்கும். தாங்கள் கொண்டு வந்துள்ள இந்த எலும்புகள் வேறொருவருடையவை.

தம் குடும்பத்தில் ஏன் இளமையில் எவரும் இறப்பதில்லை என்பதற்கான காரணங்களை விளக்கி, அறம் தம் மகனைக் காக்கும் எனத் தர்ம பாலர் கூறினார்.

இவற்றைக் கேட்ட குரு உள்ளம் மகிழ்ந்து, "நான் மேற்கொண்ட இந்தப் பயணம் பலன் தராமலில்லை. மாறாகப் பெரும் பலனைத் தந்துள்ளது," எனக் கூறித் தம்மை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பிறகு, “தங்களைச் சோதிப்பதற்காகத்தான் இந்த ஆட்டு எலும்புகளை என்னோடு கொண்டு வந்தேன். தங்கள் பையன் நலமாக இருக்கிறான். உயிர் காக்கும் இந்தத் தர்ம சீலங்களை எனக்கும் அளியுங்கள்,” என வேண்டிக் கொண்டார்.

தர்ம பாலரும் குருவின் வேண்டுதலுக்கு இணங்கி, தங்கள் குடும்பத்தின் தர்ம சீலங்களை ஓலையில் எழுதிக் கொடுத்து, குருவைச் சில நாள்கள் தம் வீட்டில் தங்கும்படி கேட்டுக் கொண்டார்.

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்